RNI Number: TNBIL/2020/79792

# METRO PEOPLE ™

## WEEKLY MAGAZINE

EVERY SUNDAY | ஞாயிறுதோறும்

ENGLISH & TAMIL WEEKLY MAGAZINE | ஆங்கிலம் மற்றும் தமிழ் வார இதழ்

| 11 பிப்ரவரி 2024 | மலர் 1 - இதழ் - 74 | விலை - ரூ. 5/- | 24 பக்கங்கள் |
|---|---|---|---|
| 11 FEBRUARY 2024 | VOLUME 1 - ISSUE - 74 | PRICE - Rs.5/- | 24 PAGES |

வாழ்க்கையை மாற்றியமைக்கும் தருணங்களுக்கு

LOAN

வேண்டுமோ ?

வியாபார வெற்றிக்கு




Fuehrer™
LAKSHYA
BUSINESS LOANS

மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு



Fuehrer™
KHUSH GHAR
CONSUMER LOANS

குறைந்த நேரத்தில் எளிய முறையில் கடன் உதவி பெற எங்களை அணுகவும்.

Fuehrer™
Retain
Improvements
Breakthrough


FUEHRER CAPITAL PRIVATE LIMITED
No.149, Office No.T20, 3rd Floor, Alsa Mall
Montieth Road, Egmore, Chennai - 600 008.
info@fuehrer.in fuehrer.in

அழைக்கவும் :
+91 73051 49888
+91 73051 49333

**அரசியல் செய்திகள்**

# தமிழக மீனவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க கோரி பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்






இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகளை விடுவித்திடவும், மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண கூட்டு நடவடிக்கைக் குழுவினைப் புதுப்பித்திடவும் உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்பட்டு வரும் நிலையில், தமிழக மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடவும், அவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்திடவும் உரிய தூதரக வழிமுறைகளைப் பின்பற்றி விரைவான, தீர்க்கமான நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடிக்கு (பிப்.9) கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில், இலங்கைக் கடற்கடையினரால் தமிழக மீனவர்கள் கைது மற்றும் மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. இதனால் பல தலைமுறைகளாக இந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் தமிழக மீனவர்களின் வாழ்வாதார உரிமைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கோவிட்-19 பெருந்தொற்று காலத்தைத் தவிர்த்து, கடந்த சில ஆண்டுகளில் இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது கணிசமாக அதிகரித்துள்ளது. பாரம்பரியமாக தமிழக மீனவர்கள் பயன்படுத்தி வரும் மீன்பிடிப் பகுதிகள் இலங்கைக் கடற்படையினரால் கட்டுப்படுத்தப்படுகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரமும், பொருளாதாரமும் பெருமளவில் பாதித்துள்ளது. மீன்பிடித் தொழிலையே நம்பியுள்ள அவர்களின் கலாச்சார மற்றும் சமூகக் கட்டமைப்புக்கு பெருத்த அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. 2023-ம் ஆண்டில், இலங்கைக் கடற்படையினர் 243 மீனவர்களை கைது செய்துள்ளதுடன், 37 படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர். கடந்த 28 நாட்களில் மட்டும், 6 சம்பவங்களில், 88 மீனவர்கள் கைது செய்யப்பட்டு, 12 மீன்பிடிப் படகுகள் சிறைபிடிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட பதற்றமான சூழ்நிலையில், மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் மீது அடையாளம் தெரியாத நபர்களால் நடத்தப்படும் தாக்குதல்கள், மீனவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கு ஏற்படுத்தும் சேதங்கள் கவலையை மேலும் அதிகரித்துள்ளது. இதுபோன்ற செயல்கள் மீனவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிப்பதுடன், மீனவர்களுக்கு பொருளாதார பாதிப்புகளை மேலும் அதிகரித்துள்ளது. வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளை நாட்டுடைமையாக்கிட இலங்கை அரசாங்கத்துக்கு அதிகாரமளிக்கும் வகையில், 2018-ம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தினால் கடல்சார் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் தொடர்பாக, முன்னரே தான் எழுதியிருந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தேன். இலங்கை அரசின் இந்த நடவடிக்கையால், நல்ல நிலையில் உள்ள, பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் மீன்பிடிப் படகுகளை மீட்டு, தமிழகத்துக்குக் கொண்டு வர முடியவில்லை. பல மீனவர்கள் தாங்கள் வாழ்நாள் சேமிப்பைக் கொண்டு, தங்களது வர்த்தகத்துக்கு இன்றியமையாத படகுகளை வாங்குவதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும் முதலீடு செய்துள்ளனர். முறையான இழப்பீடு அல்லது மாற்று ஏற்பாடுகள் ஏதுமில்லாமல், படகுகள் இதுபோன்று நாட்டுடையாக்கப்படுவது. மீனவர்களையும், அவர்களது குடும்பங்களையும் நிதி நெருக்கடியில் தள்ளியுள்ளது. எனவே, பறிமுதல் செய்யப்பட்டு நாட்டுடமையாக்கப்பட்டுள்ள இந்திய மீன்பிடிப் படகுகளைத் திரும்பப் பெற்றிடவும், படகுகளை உடனடியாக விடுவித்திடவும் ஏதுவாக, மேற்படி சட்டத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள இலங்கை அரசை வலியுறுத்திட வேண்டும். தமிழக மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வினை உறுதி செய்திடவும், மீனவ சமூகங்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்திடவும் உரிய தூதரக வழிகளைப் பின்பற்றிட வேண்டும். கூட்டு நடவடிக்கைகளின் மூலம் இது சாத்தியமாகும் என்பதால், இந்த நோக்கத்துக்காக அமைக்கப்பட்ட கூட்டு நடவடிக்கைக் குழுவினைப் புதுப்பிக்க, விரைவான மற்றும் தீர்க்கமான நடவடிக்கையை எடுக்க வேண்டும். இலங்கை வசம் தற்போதுள்ள 77 மீனவர்கள் மற்றும் அவர்களது 151 படகுகளை உடனடியாக விடுவித்திடத் தேவையான அனைத்து தூதரக முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். 3-1-2024 அன்று பாகிஸ்தான் அதிகாரிகளால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களையும், 5-12-2023 அன்று குவைத் கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்ட நான்கு தமிழக மீனவர்களையும் விடுவித்திடவும், உரிய தூதரக வழிமுறைகளைப் பின்பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அக்கடிதத்தில் முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சரத் பவார் அணிக்கு புதிய பெயர்: தேர்தல் ஆணையம் ஒதுக்கீடு



சரத் பவார் அணிக்கு 'தேசியவாத காங்கிரஸ் கட்சி சரத்சந்திர பவார்' என்ற புதிய பெயர் அளிக்கப்பட்டுள்ளது. தேசியவாத காங்கிரஸ் கட்சியை சேர்ந்த 8 எம்எல்ஏ.க்கள் அஜித் பவார் தலைமையில், சிவ சேனா ஷிண்டே பிரிவு மற்றும் பாஜக கூட்டணியில் கடந்தாண்டு ஜுலை மாதம் இணைந்து மகாராஷ்டிரா அரசில் அங்கம் வகித்தனர்.

இந்நிலையில் தேசியவாத காங்கிரஸ் கட்சி யாருக்கு சொந்தம் என தேர்தல் ஆணையத்திடம் முறையிடப்பட்டது. பெரும்பான்மையுடன் திகழும் துணை முதல்வர் அஜித் பவார் தலைமையிலான அணிதான் உண்மையான தேசியவாத காங்கிரஸ் என தேர்தல் ஆணையம் தீர்ப்பளித்தது. இதையடுத்து தனது அணிக்கான பெயர் பட்டியலை அனுப்பி வைக்கும்படி சரத் பவாரிடம், இந்திய தேர்தல் ஆணையம் கேட்டிருந்தது.

இந்நிலையில் தேர்தல் ஆணையம், சரத்பவாருக்கு நேற்று முன்தினம் அனுப்பிய கடிதத்தில், தாங்களது முதல் விருப்பமான என்சிபி-சரத்சந்திர பவார் என்ற பெயரை தேர்தலுக்கு ஏற்றுக் கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. இதன் மூலம் அவரது அணிக்கு தேசியவாத காங்கிரஸ் - சரத்சந்திர பவார்' என்ற பெயர் கிடைத்துள்ளது

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு**

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாக கொண்டிருக்கின்றன. அதுபோல உலகம் கடவுளை அடிப்படையாக கொண்டிருக்கிறது.

RNI Number: TNBIL/2020/79792

# METRO PEOPLE ™

## WEEKLY MAGAZINE

EVERY SUNDAY
ENGLISH & TAMIL WEEKLY MAGAZINE

ஞாயிறுதோறும்
ஆங்கிலம் மற்றும் தமிழ் வார இதழ்

| 11 பிப்ரவரி 2024 | மலர் 1 - இதழ் - 74 | விலை - ரூ. 5/- | 24 பக்கங்கள் |
|---|---|---|---|
| 11 FEBRUARY 2024 | VOLUME 1 - ISSUE - 74 | PRICE - Rs.5/- | 24 PAGES |


# சென்னை மெட்ரோ ரயில் 2 ஆம் கட்டப் பணிகளுக்கு விரைந்து ஒப்புதல் அளிக்க வேண்டும்: பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

மத்திய அரசும், தமிழக அரசும் இணைந்து கூட்டு முயற்சி அடிப்படையில், 50:50 என்ற சமபங்கு வீதத்தில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் முதற்கட்டப் பணிகள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டன. இதனடிப்படையில், 63,246 கோடி ரூபாய் செலவில், 119 கிலோமீட்டர் நீளமுள்ள மேலும் மூன்று வழித்தடங்களைக் கொண்ட இரண்டாம் கட்டப் பணிகளுக்கு தமிழக அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மத்திய அரசின் ஒப்புதலுக்காக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்திற்கு (MoHUA) பரிந்துரைக்கப்பட்டு




அனுப்பப்பட்டது. மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் மற்றும் நிதிஆயோக் ஆகியவற்றின் பரிந்துரையுடன், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, புதிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் நிதி ஒப்புதல்களும் இறுதி செய்யப்பட்டு அனுப்பப்பட்டது. இதற்குப் பிறகு, மத்திய உள்துறை அமைச்சர் , 21-11-2020 அன்று சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதாகத் தெரிவித்துள்ளார். 2021-2022 ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் இத்திட்டத்துக்கான எதிர் நிதியுதவிக்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னரும், 17-8-2021 அன்று பொது முதலீட்டு வாரியத்தால் (PIB) பங்கு பகிர்வு மாதிரியின் கீழ் மத்திய துறை திட்டமாக பரிந்துரைக்கப்பட்ட நிலையிலும், மத்திய அரசின் ஒப்புதலை தமிழக அரசு ஆவலுடன் எதிர்பார்த்தது. ஆனால் பிரதமர் உடனான பல்வேறு சந்திப்புகளின்போது இது தொடர்பாக தான் வலியுறுத்தி வந்தபோதிலும், இதில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்தத் திட்டத்துக்கான முன்மொழிவு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் ஒப்புதலுக்காக இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் காத்திருக்கின்றோம். மத்திய அரசின் ஒப்புதலை எதிர்பார்த்து, குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்தத் திட்டம் முடிக்கப்படுவதை உறுதி செய்திட ஏதுவாக, இரண்டாம் கட்டப் பணிகளை தமிழக அரசு தொடங்கியுள்ளது. பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் ஒப்புதல் இல்லாத நிலையில், மத்திய அரசின் பங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் மாநில நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொண்டு வருவதாகவும், இது பணிகளின் வேகத்தைக் குறைத்துள்ளதோடு, மாநில அரசுக்குக் கடுமையான நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும். அப்போதுதான் சென்னை மக்களின் இந்த கனவுத் திட்டத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்படுத்த முடியும். எனவே, இந்த விஷயத்தில் பிரதமர் மோடி தனிப்பட்ட முறையில் தலையிட்டு, முதல் கட்டப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றிச் செயல்படுத்தியதைப்போல, 50:50 என்ற சமபங்கு வீதத்தில், மத்திய மற்றும் மாநில அரசின் கூட்டு முயற்சியில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இரண்டாம் கட்டப் பணிகளையும் விரைந்து நிறைவேற்றிட ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்




**அரசியல் செய்திகள்**

# கூட்டாட்சிக் கட்டமைப்பை பாதுகாக்க வேண்டும் டெல்லி ஆர்ப்பாட்டத்தில் பினராயி விஜயன் முழக்கம்

இந்தியாவின் கூட்டாட்சி கட்டமைப்பை பாதுகாக்க டெல்லியில் கூடியுள்ளோம் என்று டெல்லி போராட்டம் குறித்து கேரள முதல்வர் பினராயி விஜயன் பேசியுள்ளார். மாநில அரசுகளின் நிதி நிர்வாகத்தில் மத்திய பாஜக அரசு தலையிடுவதை எதிர்த்து, டெல்லி ஜந்தர் மந்தரில் கேரள அமைச்சரவை சார்பில் அம்மாநில முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்தப் போராட்டத்தில் தமிழக அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால், பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான், ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா, மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் டி ராஜா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். காலை தொடங்கிய இந்த ஆர்ப்பாட்டத்தில் கேரளத்தில் ஆளும் எல்டிஎப் கூட்டணியின் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக, கேரளா இல்லத்தில் தொடங்கிய கண்டன ஊர்வலம் ஜந்தர் மந்தரில் உள்ள போராட்ட தளத்தில் நிறைவடைந்தது. ஆர்ப்பாட்டத்தில் பேசிய கேரள முதல்வர் பினராயி விஜயன்,




'மாநிலங்களின் யூனியன் என கருதப்படும் மத்திய அரசானது எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு எதிரான ஜனநாயகமற்ற அரசாக மாறிக்கொண்டிருக்கிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும், மத்திய - மாநில உறவுகளில் சமநிலையை மீட்டெடுக்கும் வகையிலும் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது.மாநிலத்தின் அதிகாரங்களை பறிக்கும் வகையில் மத்திய அரசு சட்டங்களை உருவாக்கி வருகிறது. மாநிலங்களின் உரிமைகள் நசுக்கப்படுகிறது. மாநிலங்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில், மாநிலங்களின் கருத்தைக் கேட்காமல், அவர்களின் ஒப்புதலைப் பெறாமல், பன்னாட்டு ஒப்பந்தங்கள் போடப்படுகின்றன. இவை அனைத்தும் மாநிலங்களின் உரிமைகள் எப்படி நசுக்கப்படுகின்றன என்பதற்கும், இந்தியா எவ்வாறு ஜனநாயகமற்ற நாடாக மாறுகிறது என்பதற்கும் உதாரணம். மாநிலங்களின் நிதி ஆதாரங்களை மத்திய அரசு எடுத்துக்கொள்வதால் இந்தியாவின் கூட்டாட்சிக் கட்டமைப்பு பாதிக்கப்படுகிறது. இதற்கு எதிராக எங்களின் வலுவான எதிர்ப்பைப் பதிவு செய்யவும், இந்தியாவின் கூட்டாட்சி கட்டமைப்பைப் பாதுகாக்கவும் இன்று டெல்லியில் நாங்கள் ஒன்றுகூடியுள்ளோம்' என்று பேசினார். இதனிடையே, மத்திய இடைக்கால பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்காததை கண்டித்தும், வெள்ள நிவாரணம் தராததை கண்டித்தும் நாடாளுமன்ற வளாக காந்தி சிலை முன்பு திமுக கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் கருப்பு சட்டை அணிந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதன் முழு விவரம்: நிவாரணம் கேட்கவில்லை: உரிமையைத் தாருங்கள் - நாடாளுமன்றத்தில் திமுக எம்பிக்கள் போராட்டம்முன்னதாக, மத்திய அரசை கண்டித்து கர்நாடக முதல்வர் சித்தராமையா தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் டெல்லியில் உள்ள ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்தினர். இதில் கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார், அமைச்சர்கள், காங்கிரஸ் எம்பிக்கள், எம்எல்ஏக்கள், எம்எல்சிக்கள் உட்பட 500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். அதன் முழு விவரம்: கர்நாடகாவுக்கு உரிய நிதி ஒதுக்காத மத்திய அரசை கண்டித்து டெல்லியில் முதல்வர் சித்தராமையா தலைமையில் போராட்டம்

# மீனவர் பிரச்சினையில் முதல்வர் ஸ்டாலினின் கடிதங்களால் எந்தப் பயனும் ஏற்படாது: ராமதாஸ்

தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வங்கக்கடலில் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் 19 பேரை அவர்களின் இரு விசைப்படகுகளுடன் சிங்களப் படை கைது செய்திருக்கிறது. கைது செய்யப்பட்டவர்களில் இருவர் ஒடிசாவில் இருந்து வந்து மீன்பிடி தொழிலாளர்களாக பணி செய்து வந்தவர்கள் என்று கூறப்படுகிறது. தமிழக மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்த நிலையில், அத்துமீறி நுழைந்து தமிழக மீனவர்களை இலங்கைப் படை கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.ராமேஸ்வரம் மீனவர்கள் 23 பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தான் கைது செய்யப்பட்டனர். அவர்களை மீட்க இன்னும் நடவடிக்கை எடுக்கப்படாத



நிலையில், மேலும் 19 மீனவர்களை இலங்கைப் படை கைது செய்திருப்பதை இயல்பான ஒன்றாக கருத முடியாது. தமிழக மீனவர்களுக்கு எதிரான திட்டமிட்ட நடவடிக்கையாகவே இதை பார்க்க வேண்டும்.தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்க வேண்டும் என்ற ஒற்றை நோக்கத்துடன்தான் அவர்களை இலங்கை கடற்படை கைது செய்து வருகிறது என்பதை பல நூறு முறை சுட்டிக்காட்டியிருக்கிறேன். இதை உணர்ந்து இந்த சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக மத்திய அரசுக்கு தமிழக முதல்வர் கடிதங்களை மட்டும் எழுதிக் கொண்டிருப்பது போதாது. அதனால், எந்தப் பயனும் ஏற்படாது.தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் கைது நடவடிக்கைகள் குறித்த வழக்கை சில நாட்களுக்கு முன் விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், மீனவர்கள் சிக்கலுக்கு தீர்வு காண ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் எடுக்காதது ஏன் என்று வினா எழுப்பியிருந்தது. உயர் நீதிமன்றத்தின் கண்டனத்திற்குப் பிறகாவது மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.வங்கக் கடலில் பாரம்பரியமாக தமிழக மீனவர்கள் மீன்பிடித்து வரும் பகுதிகளில் தொடர்ந்து தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பது சட்டபூர்வ உரிமையாக்கப்பட வேண்டும். இது தொடர்பாக இலங்கை அரசுடன் மத்திய அரசு பேச்சு நடத்த வேண்டும். இப்போது கைது செய்யப்பட்ட 19 மீனவர்கள் உட்பட இலங்கை சிறைகளில் வாடும் அனைத்து மீனவர்களையும், இலங்கை அரசிடம் உள்ள அனைத்து படகுகளையும் மீட்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

## அரசியல் செய்திகள்

# தேசிய கட்சிகளுடன் கூட்டணி கிடையாது - பழனிசாமி திட்டவட்ட அறிவிப்பு

தேசிய கட்சிகளுடன் கூட்டணி வைத்துவிட்டால் தேசிய அளவில் பார்வை சென்றுவிடுகிறது. மாநிலத்தின் பிரச்சினையை காது கொடுத்து கேட்பது கிடையாது. தமிழக மக்களுக்கு யார் உதவி செய்கிறார்களோ அவர்களுக்கு பிரச்சினையின் அடிப்படையில் மத்தியில் ஆதரவு கொடுக்கப்படும் என அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி பேசினார்.நாமக்கல் மாவட்ட அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு ஆலோசனைக் கூட்டம் சங்ககிரியில் நேற்று நடைபெற்றது. கட்சியின் மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.தங்கமணி தலைமை வகித்தார். கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் முதல்வருமான பழனிசாமி பங்கேற்றுப் பேசியதாவது : அதிமுகதான் ஜனநாயக கட்சி.திமுகவோ வாரிசு அரசியல் கட்சி. முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு பிறகு, ஏதோ தில்லுமுல்லு செய்து கொல்லைப்புறத்தின் வழியாக ஸ்டாலின் ஆட்சிக்கு வந்துள்ளார். அவருக்குப் பிறகு அவரதுமகன்.உதயநிதி ஸ்டாலினை



விளையாட்டுத் துறை அமைச்சராக்கி முன்னிலைப்படுத்தி வருகின்றனர். ஆனால், அதிமுகவில் அப்படியில்லை. அதிமுகவில்தான் ஒருகிளைச் செயலாளர் முதல்வராகவும், பொதுச்செயலாளராகவும் ஆக முடியும்.தமிழகம் மட்டுமல்ல இந்தியாவில் வேறெந்த கட்சியிலும் இது நடக்காதது. அதிமுகவில் நடக்கிறது. தேசிய கட்சியுடன் கூட்டணி வைத்துவிட்டால் தேசிய அளவில் பார்வை சென்றுவிடுகிறது. அவர்கள், மாநிலத்தின் பிரச்சினையை காது கொடுத்து கேட்பது கிடையாது.தமிழக மக்களின் உரிமைகளை பாதுகாக்க, தேவையான திட்டம், புயல், வெள்ளம், வறட்சி போன்ற காலங்களில் நிதியை பெற்று வர தமிழக மக்களுக்கு யார் உதவி செய்கிறார்களோ அவர்களுக்கு பிரச்சினையின் அடிப்படையில் மத்தியில் ஆதரவு கொடுக்கப்படும். தமிழக மக்களுக்கு பிரச்சினை வரும்போது அதை எடுத்துச் சொன்னால் காது கொடுத்துக் கேட்பது கிடையாது.அதனால் நாம் பிரிந்து விட்டோம். நமது உரிமைகளை பாதுகாக்க பிரிந்து விட்டோம். தமிழக மக்களின் பிரச்சினையை அதிமுக கூட்டணி தீர்த்து வைக்கும். சில பேர் கேட்கின்றனர் எங்கே கூட்டணி என்று. பொறுத்து இருந்து பாருங்கள் அதிமுக கூட்டணி சிறப்பான கூட்டணி அமைக்கும்.ஆனால், திமுக, தேசிய அளவில் இண்டியா கூட்டணி என ஒன்றை வைத்துக் கொண்டு ஆட்சியைப் பிடிக்கும் நோக்கில் செயல்படுகின்றனர். ஆனால் கார் டயர்போல் ஒவ்வொன்றாக கழன்று சென்று கொண்டு இருக்கிறது. முதல்வர் ஸ்டாலின் ராசியானவர். கடந்த மக்களவைத் தேர்தலில் அவர் ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராக அறிவித்தார்.ஆனால் அந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி எதிர்க்கட்சியாக கூட வரமுடியவில்லை. தற்போது இண்டியா கூட்டணி என முதல்வர் ஸ்டாலின் சொல்ல சொல்ல ஒவ்வொரு கட்சியாக பிரிந்து சென்று கொண்டுள்ளன என்றார். கட்சியின் தொழில்நுட்ப பிரிவுமாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# மதுரை கோட்ட ரயில்வே காலி பணியிடங்களை சென்னை தேர்வு வாரியம் மூலம் நடத்துக - மத்திய அரசுக்கு வைகோ வலியுறுத்தல்



மதுரை கோட்ட ரயில்வே காலி பணியிடங்களை சென்னை தேர்வு வாரியம் மூலம் நடத்த வேண்டும் என மத்திய அரசுக்கு மதிமுக பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார். மதிமுக பொதுச்செயலாளர் வைகோ இது குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையில், பிப்ரவரி 2 ஆம் தேதி மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் ரயில்வே தேர்வு வாரியங்கள் மூலம் 1.5 லட்சம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று தெரிவித்து, அதற்கான கால அட்டவணையை வெளியிட்டார்.

இதன்படி தெற்கு ரயில்வேயில் சுமார் 10,000 காலியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. அதில் மதுரைக் கோட்டத்தில் உள்ள 750 காலி பணியிடங்களும் அடங்கும்.தெற்கு ரயில்வேயில், சென்னை, சேலம், திருச்சி, மதுரை, பாலக்காடு மற்றும் திருவனந்தபுரம் என மொத்தம் ஆறு கோட்டங்கள் உள்ளன. தெற்கு ரயில்வேயில் சென்னை மற்றும் திருவனந்தபுரத்தில் ரயில்வே தேர்வு வாரியங்கள் செயல்பட்டு வருகின்றன. முன்பு சென்னை, திருச்சி, சேலம் மற்றும் மதுரைக் கோட்டக் காலியிடங்கள் சென்னை தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்பட்டு வந்தது.

பாலக்காடு மற்றும் திருவனந்தபுரம் கோட்ட காலியிடங்கள் திருவனந்தபுரம் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்பட்டு வந்தது. ஆனால் தற்பொழுது மதுரைக் கோட்டக் காலியிடங்கள் திருவனந்தபுரம் தேர்வு வாரியம் மூலம் நிரப்பப்பட உள்ளது.

ரயில்வே நிர்வாகத்தின் இந்த தவறான முடிவினால் தமிழக இளைஞர் மற்றும் இளம் பெண்களுக்கு கிடைக்க வேண்டிய 750 காலி பணியிடங்கள் கேரள மாநிலத்திற்கு செல்ல உள்ளது. இதனால் கேரளத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தமிழகத்தில் பணியமர்த்தப்படும் வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது. இது தமிழக இளைஞர்களுக்கு செய்யப்படும் அநீதியாகும்.மத்திய ரயில்வே அமைச்சருக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். 1990 காலகட்டங்களில் ஜாபர் ஷெரீஃப் மத்திய ரயில்வே அமைச்சராக இருந்தபொழுதுதான் மொழிவாரி மாநிலங்களின் அடிப்படையில் ரயில்வே தேர்வு வாரியங்கள் உருவாக்கப்பட்டன.

மேலும் சில உதாரணங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். முன்பு கர்நாடக மாநிலம் ஹுப்ளி கோட்டமானது செகந்திராபாத்தை தலைமை இடமாகக் கொண்ட தெற்கு மத்திய ரயில்வேயின் கீழ் இருந்தது. ஆனால் அந்தக் கோட்டத்தின் காலியிடங்கள் முன்பு தெற்கு ரயில்வேயில் இருந்த பெங்களூரு தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்பப்பட்டு வந்தது.அதேபோல ஆந்திராவைச் சேர்ந்த விசாகப்பட்டினம் கோட்டம் புவனேஸ்வரத்தை தலைமையிடமாகக் கொண்ட கிழக்கு கடற்கரை ரயில்வேயின் கீழ் வருகிறது.

புவனேஸ்வரத்தில் ஒரு ரயில்வே தேர்வு வாரியம் உள்ளது. ஆனாலும் ஆந்திர இளைஞர்களுக்கு வாய்ப்பு கொடுக்கும் விதமாக அங்கு ஏற்படும் காலியிடங்களை தெற்கு மத்திய ரயில்வேயில் உள்ள செகந்திராபாத் தேர்வு வாரியம் மூலமாகவே இன்றும் நிரப்பப்பட்டு வருகிறது. ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களுக்கு ஒரு நீதி தமிழகத்திற்கு ஒரு நீதி என்று வகுத்து வைத்துள்ளது பெரும் கண்டனத்திற்கு உரியது.

தமிழகத்தில் ஏற்படும் வேலைவாய்ப்பு கேரள இளைஞர்களுக்குச் செல்லும் விதமாக உள்ள தற்போதைய நடமுறையை மாற்றி, மதுரைக் கோட்ட காலியிடங்களை சென்னை தேர்வு வாரியம் மூலம்தான் நிரப்ப வேண்டும். இதற்கான உத்தரவினை மத்திய ரயில்வே அமைச்சர் உடனடியாக வெளியிட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

METRO PEOPLE
WEEKLY MAGAZINE
விளம்பரங்கள்
வரவேற்கப்படுகின்றன உங்கள் விளம்பர தேவைக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்
75500 01222
73054 62666

மருத்துவ குறிப்புகள்

# மருத்துவ நேரம் ஜீவன் மருத்துவமனை (MWC)

Jeevan Hospitals
Holistic Health Care
@ MAHINDRA WORLD CITY, Chennai

CELEBRATING 32 Years of QUALITY HEALTHCARE



**Dr.V.SARAVANAN**
M.B.B.S., M.S.,(ORTHO)
CONSULTANT ORTHOPEDICIAN
JEEVAN HOSPITALS

**நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்,
வாய்நாடி வாய்ப்பச் செயல்.**

வயதானவர்களுக்கு மட்டுமே மூட்டுவலி/மூட்டு தேய்மானம் என்பது போன்ற பிரச்சனைகள் வருகிறது என்று பலரும் நினைத்து வருகின்றனர் . ஆனால் அது உண்மை அல்ல காரணங்கள் உடற்பருமன் (அதீக எடை), சரியான உடற்பயிற்சி இல்லாமல் இருத்தல், மதுபழக்கம், புகைபிடித்தல், பெண்களுக்கு ஏற்படும் மெனோபாஸ் (Menopause) மற்றும் சில பிரச்சினைகளால் கருப்பை அகற்றுவதனால் வரும் ஹார்மோன்களின் (Hormones) . மாற்றத்தினாலும், தொடையில் உள்ள தசை (Quadriceps Muscle) வழுவடையாததாலும் மற்றும் இதரநோய்களான சர்க்கரை (Diabetes), ரத்தக்கொதிப்பு (Blood Pressure), காசநோய், புற்றுநோய் (Cancer) மற்றும் பரம்பரையாகவும் (Familial) - இது போன்ற பல காரணங்கள் உள்ளன.

உணவுமுறைகள் - பொதுவாக எலும்பு பிரச்சனைகளுக்கு வலுவு அளிக்கக்கூடியது கால்சியம் (Calcium) என அனைவரும் அறிவோம். ஆதலால் 45 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் மற்றும் முதியோர்கள் கீழ்கண்ட முறைகளை பயன்படுத்தி அதன் பலனைப் பெறலாம். பால், பால் சார்ந்த பொருட்கள், சீஸ்,இறைச்சி, முட்டை, ராகி, கொள்ளு, சோயா பீன்ஸ், பச்சைக் காய்கறிகள், பழங்கள்,நட்ஸ் கீரைகள், (Broccoli)இவற்றுடன் கால்சியம் மாத்திரைகள் ஆகியவற்றை பயன்படுத்திக் கொள்ளலாம்.

இக்காலகட்டத்தில் மூட்டு வலியினால் பலரும் அவதிப்படுகின்றனர். மூட்டுவலி உள்ளவர்கள் மேற்கண்ட உணவு முறைகளுடன்,காலினை குறுக்கே வைத்து உட்காருவது, மாடிப் படிக்கட்டு ஏறுவதனை தவிர்ப்பது, குந்துதல் (Squatting) போன்றவற்றை குறைத்துக் கொள்ளலாம். மேலும் இத்துடன் (Quadriceps,Hamspring Muscles) தொடை தசையை வலுவுபடுத்த கட்டாயமாக உடற்பயிற்சினை மேற்கொள்ள வேண்டும்.

கால்சியம் குறைபாட்டினை (Hypocalcemia) ஹைப்போகால்சீமியா என்று அழைப்பார்கள். விட்டமின் டி (Vitamin -D) குறைபாடு மற்றும் சிறுநீரக நோய் இரண்டுமே கால்சியம் குறைபாட்டை ஏற்படுத்தும். ஒரு வயதுக்கும் மேற்பட்ட குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கு ஒரு நாளைக்கு 800 மி.கிராம் (800mg)அளவும், பதின்ம வயதினர் மற்றும் கர்ப்பிணி பெண்கள் , பாலூட்டும் பெண்களுக்கு (1200,mg) 1200 மி.கி கால்சியம் தேவைப்படுகிறது

கால்சியம் குறைபாட்டின் அறிகுறிகள் : தசை பிரச்சினைகள், நரம்பு சம்மந்தப்பட்ட பிரச்சினைகள், உடல்சோர்வு, பசியின்மை சருமம், முடி, நகம், சம்மந்தப்பட்ட பாதிப்புகள் வருகின்றன பிரச்சினைகள் வருவதற்கு முன்பே மேற்கண்ட பழக்கவழக்கங்கள், உணவு முறைகள், கால்சியம் மாத்திரைகள், உடற்பயிற்சி போன்றவற்றை முன்கூட்டியே செய்வதன் மூலம் பலனைப் பெற்று பயன் அடையலாம். வருமுன் காப்போம் !!!

## உணவே மருந்து

## தூதுவளை நன்மைகள் அற்புத சத்துக்கள்

சளி பிடித்தால் சனி பிடித்தது போல என்று சொல்வார்கள், நெஞ்சு சளி பிடித்துக்கொண்டால் இருமல் வாட்டி வதைத்து விடும். தூதுவளை என்ற மூலிகை இருமலை போக்குவதோடு சளியை அடியோடு நீக்கிவிடும்.
மழை, காற்று, கடும் வெயில் என சீதோஷ்ண நிலை மாறி மாறி வருகிறது. இதில் பலருக்கு சளி தொந்தரவு ஏற்படுகிறது. கீரைக்காரம்மாவிடம் தூதுவளைக்கு சொல்லி வையுங்கள். ஆஸ்துமா நோயை கட்டுப்படுத்தும், ஆண்மையை அதிகரிக்கும் என்று தூதுவளை பற்றி சித்த மருத்துவர்கள் கூறியுள்ளனர். தூதுவளை இலை அரைச்சு... தொண்டையிலதான் நனைச்சு மாமன்கிட்ட பார்க்கப்போறேன் மணிக்கணக்கா என்று ஒரு பாட்டே உள்ளது. நுரையீரலை பாதுகாக்கும் அற்புத அருமருந்து இந்த தூதுவளை. இதற்கு சிங்கவல்லி, அளர்க்கம் என்று பல பெயர்கள் உண்டு. சிறிய முட்களுடன் கூடிய கொடி வகை. பூக்கள் ஊதா நிறத்தில் பூக்கும். வேலிகளில் அதிகம் பற்றி படந்து காணப்படும். சிறு முட்கள் நிறைந்து காணப்படும். இதன் இலை, பூ, காய், வேர் அனைத்தும் மருத்துவப் பயன் கொண்டது. வீடுகளில் இடம் இருப்பவர்கள் தூதுவளையை தொட்டியில் வளர்க்கலாம். தூதுவளை இலைகள் கீரையாகப் பயன்படுத்தப்படுகின்றன. இலை, பூ, காய் போன்றவை மருத்துவக் குணம் கொண்டவை.இந்திய, தாய்லாந்து பாரம்பரிய மருத்துவங்களில் கைமருந்தாக நீண்டகாலமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இலைகளிலும் முட்கள் அதிகம் இருக்கும். பயன்படுத்துவதற்கு முன் முட்களை அகற்றிவிட வேண்டும்.நெஞ்சுச்சளி குணமாகும் சளி, இருமல், மார்புச்சளியைக் குணப்படுத்தத் தூதுவளை அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இலைகளை நிலக்காய்ச்சலில் காய வைத்துப் பொடியாக்கி மருந்து போலப் பயன்படுத்தலாம். தூதுவளை துவையல் தூதுவளை இலையைப் பறித்து நன்கு சுத்தம் செய்து அதனுடன் மிளகு, சின்னவெங்காயம், பூண்டு சேர்த்து நன்கு வதக்கி துவையல் செய்து ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் உடலுக்கு வலு கொடுப்பதுடன் இருமல், இரைப்பு, சளி முதலியவை நீங்கும். தூதுவளை கசாயம் தூதுவளை இலையைக் கஷாயம் வைத்து, 1 கிராம் திப்பிலி பொடி சேர்த்துச் சாப்பிட்டால் நெஞ்சில் கட்டிக்கொண்டிருக்கும் சளி, காய்ச்சல் போன்றவை குணமடையும். தூதுவளையால் மலச்சிக்கல் ஏற்பட வாய்ப்பு உண்டு. அதைத் தவிர்க்க நெய் அல்லது பால் சேர்த்துக்கொள்ளலாம். உடல் வலிமை தூதுவளை இலையை நெய்யில் வதக்கி, துவையல் செய்து வாரத்தில் இரண்டு நாளாவது பயன்படுத்தினால் வாயுவைக் கண்டிக்கும். உடல் வலிமை ஏற்படும். தூதுவளையில் கால்சியம் சத்து அதிகம் நிறைந்துள்ளதால் எலும்பையும்,பற்களையும் பலப்படுத்தும். அதனால் தூதுவளை கீரையை பருப்புடன் சேர்த்துசமைத்து நெய் சேர்த்து 48 நாட்கள் சாப்பிட்டு வரவேண்டும். ஆண்மை அதிகரிக்கும் தூதுவளையை நன்கு அரைத்து அடை போல் செய்து சாப்பிட்டு வந்தால் தலையில் உள்ள கபம் குறையும். இந்திரியம் அதிகமாக்கி ஆண்மையைக் கூட்டும். விந்தணு அதிகரிக்கும் தூதுவளைக் கீரையை சமையல் செய்து சாப்பிட்டு வந்தால் உடலுக்கு வலு கொடுப்பதுடன் ஆண்மை சக்தியையும் அதிகரிக்கும். தூதுவளைப் பூக்கள், மொட்டுக்களை நெய்யில் வதக்கி, பணங்கல்கண்டு சேர்த்து கொதிக்க வைத்து ஆறவைத்து காய்ச்சிய பால் சேர்த்து சாப்பிடலாம். கருப்பை புற்றுநோய் குணமாகும் தூதுவளையை அடிக்கடி பயன்படுத்தினால் புற்று நோய் வராமல் தடுக்கலாம். தொண்டைப் புற்று, கருப்பை புற்று, வாய்ப்புற்று ஆகிய வற்றிற்கு தூதுவளை மருந்து மிக்க நல்ல பலன் கொடுத்துள்ளது. பூரண குணமடையலாம் தொண்டைப்புற்று, வாய்ப்புற்றுக்கு நல்ல மருந்தென ஆய்வு மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. புகைப்பழக்கம், மதுப்பழக்கம் ஆகியவற்றால் ஏற்பட்ட புற்றுநோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிய நேரிட்டால் தூதுவளை இலையைப் பயன்படுத்தி, சில மாதங்களிலேயே பூரண குணமடையலாம். என்ன மக்களே இனி தூதுவளையை மிஸ் பண்ண மாட்டீங்கதானே

**தொழில்நுட்பச் செய்திகள்**

# 'புனைா மூலம் ஜெனரேட் செய்த படம்' – இன்ஸ்டா, ஃபேஸ்புக்கில் குறிப்பிட மெட்டா திட்டம்




சமூக வலைதளங்களில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இமேஜ், ஆடியோ மற்றும் வீடியோ போன்றவை ஜெனரேட் செய்யப்பட்டு, சமூக வலைதளங்களில் பகிரப்படுகிறது. சமயங்களில் இது சர்ச்சைக்கும் வழிவகுக்கிறது. இந்த சூழலில் புனைா மூலம் ஜெனரேட் செய்த படங்களை அடையாளப்படுத்தும் விதமாக இன்ஸ்டாகிராம், ஃபேஸ்புக் போன்ற சமூக வலைதளங்களில் அதனை குறிப்பிட மெட்டா திட்டமிட்டுள்ளது. விரைவில் இது நடைமுறைக்கு வரும் என்றும் தகவல். முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கைது செய்யப்பட்டது போலவும், போப் ஆண்டவர் வெள்ளை நிற ஜாக்கெட்டை அணிந்திருப்பது என ஏஐ மூலம் ஜெனரேட் செய்த படங்கள் சமூக வலைதளங்களில் பேசு பொருளானது. இது டீப்ஃபேக் என அறியப்படுகிறது. இந்த சூழலில் மெட்டா நிறுவனம் இந்த முடிவை முன்னெடுத்துள்ளது. இதன் மூலம் சமூக வலைதள பயனர்கள் ஏஐ மூலம் ஜெனரேட் செய்யப்பட்ட படம் மற்றும் அசல் படங்களுக்கு இடையிலான வித்தியாசத்தை அடையாளம் காணலாம். கூகுள், மைக்ரோசாப்ட், ஓபன் ஏஐ, அடாப், மிட் ஜெர்னி, ஷட்டர்ஸ்டாக் போன்ற நிறுவனங்களின் ஏஐ டூல் மூலம் ஜெனரேட் செய்யப்படும் படங்களுக்கு பொருந்தும் என மெட்டா தெரிவித்துள்ளது. இருந்தாலும் வாட்டர் மார்க்ஸ் மற்றும் பிற தொழில்நுட்ப மெட்டா டேட்டாவை சேர்க்கத் தொடங்கினால் மட்டுமே சாத்தியம் என தெரிகிறது. மேலும், வாட்டர் மார்க்ஸ் இல்லாத படங்களில் அதை அடையாளம் காண்பதற்கான டூலை இன்ஸ்டா, ஃபேஸ்புக் தளங்களில் சேர்க்கவும் மெட்டா திட்டமிட்டுள்ளது. இருந்தும் இந்த நடைமுறை ஏஐ மூலம் ஜெனரேட் செய்யப்படும் ஆடியோ மற்றும் வீடியோவை லேபிள் செய்வது இப்போதைக்கு இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'Ask QX' சாட்ஜிபிடிக்கு போட்டியாக அறிமுகம் தமிழ் உட்பட 12 இந்திய மொழிகளில் பயன்படுத்தலாம்




தமிழ் உட்பட 12 மொழிகளில் இயங்கும் 'Ask QX' எனும் ஜெனரேட்டிவ் ஏஐ அசிஸ்டன்ட் டூல் அறிமுகமாகி உள்ளது. இது சாட்ஜிபிடிக்கு போட்டியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அது குறித்து விரிவாக பார்ப்போம்.கடந்த 2022-ம் ஆண்டின் இறுதி முதல் உலக மக்கள் மத்தியில் ஜெனரேட்டிவ் ஏஐ பயன்பாடு அதிகரித்து காணப்படுகிறது. இதற்கு சாட்ஜிபிடி ஜெனரேட்டிவ் ஏஐ சாட்பாட் தான் காரணம். அதையடுத்து பல்வேறு சாட்பாட்கள் அறிமுகமாகின. டிஜிட்டல் சாதனங்களை பயன்படுத்தி வரும் மக்கள், இதன் ஊடாக தங்களுக்கு வேண்டிய கேள்விகளை கேட்டு பதிலை அறிந்து கொள்கின்றனர். அதோடு போட்டோ, ஆடியோ போன்றவற்றையும் பயனர்கள் தங்களது கற்பனைக்கு ஏற்ப ஏஐ சாட்பாட்கள் மூலம் உருவாக்கலாம். இந்நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் 'Ask QX' எனும் ஜெனரேட்டிவ் ஏஐ அசிஸ்டன்ட் டூல் அறிமுகமாகி உள்ளது. சுமார் 100 மொழிகளில் பயனர்கள் இதனோடு தொடர்பு கொண்டு, தங்களுக்கு வேண்டிய தகவல்களை பெற முடியும். இதில் தமிழ் உட்பட இந்தியாவின் 12 மொழிகளும் அடங்கியுள்ளன. கட்டணமில்லா மற்றும் சந்தா கட்டணம் செலுத்தி என பயனர்கள் இதனை பயன்படுத்த முடியும். இப்போதைக்கு இதில் டெக்ஸ்ட் வழியில் பேசலாம். இணையதளம் மற்றும் மொபைல் செயலி மூலம் இதனை பயன்படுத்தலாம்.QX லேப் ஏஐ எனும் நிறுவனம் இதனை வடிவமைத்துள்ளது. சாட்ஜிபிடி போலவே இதையும் பயன்படுத்தலாம். க்ரியேட்டிவ், ஸ்டேண்டர்ட் மற்றும் ஃப்ரொபஷனல் என மூன்று வகையில் இதை பயன்படுத்த முடியும். விரைவில் இதன் ஊடாக ஆடியோ, வீடியோ மற்றும் போட்டோவை அடிப்படையாகக் கொண்டு பயனர்கள் தங்களுக்கு வேண்டிய தகவலை பெற முடியும். அதற்கான அம்சங்கள் அறிமுகம் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலக மக்கள் அனைவருக்கும் ஏஐ சார்ந்த மேம்பாடு அவசியம் - சத்யா நாதெள்ளா




கடந்த 2022 முதல் உலக மக்கள் மத்தியில் ஏஐ குறித்த டாக் அதிகரித்து காணப்படுகிறது. இந்த சூழலில் இந்தியா மற்றும் உலக மக்கள் அனைவருக்கும் ஏஐ சார்ந்த மேம்பாடு அவசியம் என மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் சிஇஓ சத்யா நாதெள்ளா பேசியுள்ளார். பெங்களூருவில் வியாழக்கிழமை நடைபெற்ற டெவலப்பர்களுக்கான நிகழ்வு ஒன்றில் அவர் இதனை தெரிவித்தார். மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் ஏஐ டூர் நிகழ்வில் ஒன்றாக இது அமைந்தது. நாம் புரிந்து கொள்வதற்கு மாறாக நம்மை புரிந்துக் கொள்ளும் கணினிகளை வடிவமைக்க வேண்டும். பயனர்கள் உரையாடும் வகையில் அது இருக்க வேண்டும் என சொல்வோம். இப்போது நாம் அந்த நெடுநாள் ஆசையை மெய்பிக்கும் தருணத்தில் வாழ்ந்து வருகிறோம். ஏஐ சார்ந்த டூல்கள் மூலம் இந்தியா மற்றும் உலக மக்கள் மேம்பாடு காண வேண்டும். அதன் மூலம் அவர்களது சக்சஸ் ரேட் கூட்டப்பட வேண்டும். நமது விரல் நுனியில் வெறும் தகவல் மட்டுமல்லாது அதில் நிபுணத்துவம் கொண்டவராக இருக்க ஏஐ உதவும். இந்தியாவில் ஏஐ சார்ந்த உள்கட்டமைப்பு பணிகளை மைக்ரோசாஃப்ட் நிறுவனம் வலுவாக மேற்கொண்டு வருகிறது என அவர் தெரிவித்தார். மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் கோபைலட் ஜெனரேட்டிவ் ஏஐ டூல் சேவை மூலம் டெவலப்பர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஸ்டார்-அப்கள் வடிவமைத்த ஏஐ பாட் பயன்பாடு குறித்து இதில் சுட்டிக்காட்டப்பட்டது. குறிப்பாக இந்தியாவின் கிராமப்புறங்களில் இதன் பயன்பாடு குறித்து விவரிக்கப்பட்டது. ஆசியர்களுக்கு உதவும் சிக் ஷா ஏஐ, வங்கிக் கணக்கு தொடங்க உதவும் கார்யா ஏஐ போன்றவற்றின் பயன்பாடுகள் இதில் விவரிக்கப்பட்டன.

## சினிமா செய்திகள்

## உண்மை சம்பவ கதையில் ஆரி அர்ஜுனன், லட்சுமி மேனன்



உண்மைச் சம்பவம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் படத்தில் ஆரி அர்ஜுனன் கதாநாயகனாக நடிக்கிறார். மெட்ராஸ் டெக் நிறுவனம் சார்பில் அருணாச்சலம் அனந்தராமன் தயாரிக்கும் இந்தப் படத்தில் லட்சுமி மேனன் நாயகியாக நடிக்கிறார். இதில், 'மைம்' கோபி, வையாபுரி, ப்ளாக் பாண்டி, 'ஜெயிலர்' தன்ராஜ், ஷெர்லி பபித்ரா, கனிமொழி உட்பட பலர் நடிக்கின்றனர். ராஜசேகர பாண்டியன் கதை, திரைக்கதை எழுதி இயக்குநராக அறிமுகமாகிறார். செம்பூர் கே.ஜெயராஜ், ராஜசேகர பாண்டியன் வசனம் எழுதியுள்ளனர். கார்த்திக் நல்லமுத்து ஒளிப்பதிவு செய்கிறார். இதன் படப்பிடிப்பு மதுரையில் தொடங்கி இருக்கிறது. விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலை யதார்த்தமாகச் சொல்லும் இந்தப் படத்தில் மூட நம்பிக்கைகளுக்கு எதிரான கருத்துகளும் இடம் பெறும் என்கிறது படக்குழு

## 'கல்கி 2898' படத்தில் மிருணாள் தாக்குர்



நாக் அஸ்வின் இயக்கத்தில் பிரபாஸ் ஹீரோவாக நடிக்கும் படம், 'கல்கி 2898'. இதில் அமிதாப்பச்சன், கமல்ஹாசன், தீபிகா படுகோன், திஷா பதானி உட்பட பலர் நடிக்கின்றனர். சந்தோஷ் நாராயணன் இசை அமைக்கிறார். வைஜெயந்தி மூவிஸ் தயாரித்துள்ள இந்தப் படம், பான் இந்தியா முறையில் ரிலீசாகவுள்ளது. அறிவியல் புனைகதையான இந்தப் படத்தின் அடுத்தக் கட்டப் படப்பிடிப்பு வரும் 12-ம் தேதி தொடங்க இருக்கிறது. மே மாதம் 9-ம் தேதி வெளியாக இருக்கும் இதில் சில முன்னணி நடிகர்கள் கவுரவ வேடத்தில் நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது. துல்கர் சல்மான், விஜய் தேவரகொண்டா ஆகியோர் நடிக்க இருப்பதாகக் கூறப்பட்ட நிலையில், மிருணாள் தாக்குரும் கவுரவ வேடத்தில் நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.

## சசிகுமார், லிஜோ மோல் நடிக்கும் 'ஃப்ரீடம்' முதல் தோற்றம் வெளியீடு



சசிகுமார் நடிப்பில் வெளியாக உள்ள 'ஃப்ரீடம்' படத்தின் முதல் தோற்றம் வெளியிடப்பட்டு ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது. 'கழுகு', 'கழுகு 2', 'நான் மிருகமாய் மாற' ஆகிய படங்களை இயக்கிய சத்ய சிவாவின் இயக்கத்தில் வெளியாக உள்ள அடுத்த படம் 'ஃப்ரீடம்'. இப்படத்தில் சசிகுமார், லிஜோ மோல் ஜோஸ் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இப்படத்தை பாண்டியன் பரசுராமன் தயாரிக்கிறார். படத்துக்கு ஜிப்ரான் இசையமைக்க, உதயகுமார் ஒளிப்பதிவு செய்கிறார். சிநேகன், மோகன் ராஜா பாடல்களை எழுதுகின்றனர். படம் தமிழ் தவிர, தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் வெளியாக உள்ளது. இந்நிலையில், இப்படத்தின் முதல் தோற்றத்தை ஜி.வி.பிரகாஷ்குமார் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

## சர்வைவல் த்ரில்லர் படத்தில் மாஸ்டர் மகேந்திரன்



'எக்கோ' படத்தை இயக்கிய நவின் கணேஷ், அடுத்து சர்வைவல் த்ரில்லர் படத்தை இயக்குகிறார். சனா ஸ்டுடியோஸ் வழங்கும் இந்தப் படத்தை.முத்து, சந்தோஷ் சிவன், ரவி இணைந்து தயாரிக்கின்றனர். மாஸ்டர் மகேந்திரன் கதாநாயகனாக நடிக்கிறார். ஜீவிதா நாயகியாக அறிமுகமாகிறார். சார்லி, கும்கி அஸ்வின், சரத் உட்பட பலர் நடிக்கின்றனர். அபிஷேக் ஏ ஆர் இசையமைக்கிறார். ரவிவர்மா ஒளிப்பதிவு செய்கிறார். சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் படமாக்கப்படுகிறது. சனா ஸ்டுடியோஸின் முதல் தயாரிப்பான இந்தப் படத்தை இயக்குநர்கள் சீமான், சரண், அருண்ராஜா காமராஜ், கல்யாண் தொடங்கி வைத்தனர்

## நடுவுல கொஞ்சம் வெட்டு குத்துன்னு போயிட்டேன் - ஜெயம் ரவி பகிர்வு



நடுவில் கொஞ்சம் வெட்டு குத்து என படங்களில் நடித்தேன். இப்போது திரும்பி வந்துவிட்டேன் என நடிகர் ஜெயம் ரவி பேசியுள்ளார். அறிமுக இயக்குநர் ஆண்டனி பாக்யராஜ் இயக்கத்தில் ஜெயம் ரவி நடித்துள்ள 'சைரன் படத்தின் ட்ரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பேசிய நடிகர் ஜெயம் ரவி, சைரன் திரைப்படம் உணர்வுபூர்வமான படமாக உருவாகியுள்ளது. தந்தை - மகள் இடையேயான பாசத்தை அழகாக உணர முடியும். நடுவில் கொஞ்சம் வெட்டு குத்து என படங்களில் நடித்தேன். இப்போது திரும்பி வந்துவிட்டேன். இந்தப் படம் குடும்பப் படமாக இருக்கும். ஜி.வி.பிரகாஷ் மிகச் சிறப்பாக இசையமைத்துள்ளார். அவர் இந்திய அளவில் சிறந்த இசையமைப்பாளராக இருக்கிறார். இயக்குநர் ஆண்டனி பாக்கியராஜ் இன்னும் நல்ல திரைப்படங்களை எடுப்பார். இனி பெரிய மேடைகளில் அவரைக் காணலாம். அவரின் முழு உழைப்பால்தான் இப்படம் உருவாகியுள்ளது. இந்தப் படத்தில் பெண் கதாபாத்திரம் மிக முக்கியமானது. ஹீரோவுக்கு சரிசமமாக நடிக்க வேண்டும் வேண்டும். கீர்த்தி அந்த கேரக்டருக்கு சரியாக இருப்பார் என்று நினைத்தோம். அதை நிரூபிக்கும்படி நடித்துள்ளார். மிகச் சிறந்த உழைப்பாளி. சமுத்திரக்கனி நிஜத்தில் எப்போதும் சமூக கருத்துகளைச் சொல்பவர். அதற்கு நேர்மாறாக கேரக்டரில் அவரை நடிக்க வைத்துள்ளோம். 'என்னைப் போய் இப்படிப் பேச வைக்கிறீங்களே' என்றார். ஆனால் எனக்காக நடிக்க வந்தார். நான் புது இயக்குநர்கள் கூட படம் செய்கிறேன் என்கிறார்கள். நான் ஒரு கருவி அவ்வளவுதான். இயக்குநரின் உழைப்புதான் படம் வெற்றி பெறக் காரணம். யோகிபாபுவும் நானும் ட்வின்ஸ் மாதிரி ஒன்றாகவே இருந்தோம். எனக்கும் இப்படம் புது அனுபவம்தான். உங்கள் அனைவருக்கும் சைரன் பிடிக்கும் என நினைக்கிறேன் என்றார்.

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்**

இறைவனுடைய திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும். மற்றவர் கடக்க முடியாது

விளையாட்டு செய்திகள்

# பாரீஸ் ஒலிம்பிக் பதக்கத்தில் ஈஃபிள் டவரின் உலோகம்: ஏற்பாட்டாளர்கள் பகிர்ந்த சுவாரஸ்ய தகவல்




விளையாட்டு உலகில் மிகவும் பிரசித்தி பெற்ற ஒலிம்பிக் விளையாட்டு தொடர் எதிர்வரும் ஜூலை மாதம் பிரான்ஸ் நாட்டில் தொடங்க உள்ளது. இந்த சூழலில் பாரீஸ் ஒலிம்பிக் பதக்கத்தில் ஈஃபிள் டவரின் உலோகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்த சுவாரஸ்ய தகவலை பாரீஸ் ஒலிம்பிக் ஏற்பாட்டாளர்கள் பகிர்ந்து உள்ளனர். இந்தியா உட்பட பல்வேறு நாடுகளை சேர்ந்த வீரர்களும், வீராங்கனைகளும் எதிர்வரும் பாரீஸ் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லும் முனைப்புடன் தீவிர பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். மொத்தம் 329 விளையாட்டு ஈவென்ட்கள் இதில் நடத்தப்பட உள்ளது. சுமார் 10,500 பேர் இதில் போட்டியாளர்களாக பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான ஏற்பாட்டினை ஏற்பாட்டாளர்கள் ஒருங்கிணைத்து வருகின்றனர். இந்த சூழலில் பதக்கம் குறித்து சுவாரஸ்ய தகவல் வெளியாகி உள்ளது. வழக்கமாக ஒலிம்பிக் பதக்கத்தின் உருவாக்கத்தில் புதுமையை கடைபிடிக்க போட்டியை நடத்தும் நாடுகள் முற்படும். கடந்த முறை டோக்கியோ ஒலிம்பிக்கை நடத்திய ஜப்பான் நாடு, பயன்படுத்தப்பட்ட பழைய மொபைல் போன்களை கொண்டு பதக்கங்களை உருவாக்கியது. அது போல பிரான்ஸ் என்றதும் உலக மக்கள் அனைவருக்கும் சட்டென நினைவில் வரும் ஈஃபிள் டவரின் உலோகத்தை தற்போது பதக்கத்தில் பயன்படுத்தி உள்ளது அந்நாடு. பதக்கத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியான நிலையில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது பாரீஸ் ஒலிம்பிக் பதக்கத்தின் மையப்பகுதியில் ஈஃபிள் டவரின் உலோகம் ஹெக்சகன் வடிவில் இடம் பெற்றுள்ளது. பார்க்க நம் நாட்டின் 10 ரூபாய் நாணயம் போல உள்ளது. இது கடந்த காலங்களில் ஈஃபிள் டவரை புதுப்பிக்கும் பணி மேற்கொண்ட போது எடுத்த உலோகம் என்றும், அது சேமிப்பு கிடங்கில் பத்திரமாக வைக்கப்பட்டு இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பதக்கதின் மற்றொரு பக்கத்தில் நவீன ஒலிம்பிக்கின் தொடக்கத்தை குறிப்பிடும் வகையில் அமைந்துள்ளது.

# பாகிஸ்தானை வீழ்த்திய ஆஸ்திரேலியா: இறுதிப் போட்டியில் இந்தியாவுடன் பலப்பரீட்சை



நடப்பு இளையோர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானை 1 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி உள்ளது ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி.

இதன் மூலம் வரும் 11-ம் தேதி நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் இந்திய அணியுடன் ஆஸ்திரேலியா பலப்பரீட்சை மேற்கொள்கிறது.

தென் ஆப்பிரிக்க நாட்டில் நடைபெற்று வரும் இந்த தொடரில் 16 அணிகள் பங்கேற்று விளையாடின. மொத்தம் 41 போட்டிகள். இந்திய அணி நடப்பு சாம்பியன் என்ற அந்தஸ்துடன் களம் கண்டுள்ளது.

முதல் அரையிறுதி ஆட்டத்தில் தென் ஆப்பிரிக்காவை வீழ்த்தி முதல் அணியாக இந்தியா இறுதிக்கு முன்னேறியது. இந்த சூழலில் வியாழக்கிழமை நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் விளையாடின.

இதில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பவுலிங் தேர்வு செய்தது. முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி, 48.5 ஓவர்களில் 179 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது. தொடர்ந்து 180 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை ஆஸி அணி விரட்டியது.

49.1 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 181 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. பாகிஸ்தான் அணியின் பவுலர் அலி ராசா, 4 விக்கெட்களை கைப்பற்றி இருந்தார்.

# ஐசிசி டெஸ்ட் தரவரிசை பட்டியல்: முதலிடம் பிடித்து பும்ரா சாதனை



ஐசிசி டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ராமுதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது. இதில் இங்கிலாந்து அணிக்கு எதிராக விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற 2-வது டெஸ்ட் போட்டியில் 9 விக்கெட்கள் வீழ்த்திய இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ரா முதலிடத்தை பிடித்துள்ளார். இதன் மூலம் ஐசிசி டெஸ்ட் தரவரிசை பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறிய முதல் இந்திய வேகப்பந்து வீச்சாளர் என்ற வரலாற்று சாதனையை படைத்துள்ளார் 30 வயதான ஜஸ்பிரீத் பும்ரா. ஐசிசி தரவரிசையில் முதலிடத்தை கைப்பற்றும் 4-வது இந்திய வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார் பும்ரா. இதற்கு முன்னர் அந்த இடத்தை ரவிச்சந்திரன் அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, பிஷன் சிங் பேடி ஆகியோரும் அலங்கரித்துள்ளனர். விசாகப்பட்டினம் டெஸ்ட் போட்டியில் பும்ராவின் அபாரமான பந்து வீச்சால் இந்திய அணி 106 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரை 1-1 என சமநிலையை அடையச் செய்தது. பும்ரா முதலிடத்துக்கு முன்னேறிய நிலையில் அந்த இடத்தில் கடந்த 11 மாதங்களாக ஆதிக்கம் செலுத்தி வந்த ரவிச்சந்திரன் அஸ்வின் 3-வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். ஜஸ்பிரீத் பும்ரா 881 புள்ளிகளுடன் 3 இடங்கள் முன்னேறி முதலிடத்தை பிடித்துள்ள நிலையில் தென் ஆப்பிரிக்காவின் காகிசோ ரபாடா 851 புள்ளிகளுடன் 2-வது இடத்தில் தொடர்கிறார். 2 இடங்கள் பின்தங்கி உள்ள ரவிச்சந்திரன் அஸ்வின் 841 புள்ளிகளை பெற்றுள்ளார். ஆஸ்திரேலியாவின் பாட் கம்மின்ஸ் ஒரு இடம் பின்தங்கி 828 புள்ளிகளுடன் 4-வது இடம் வகிக்கிறார். ஆஸ்திரேலியாவின் ஜோஷ் ஹேசில்வுட் (818), இலங்கையின் பிரபாத் ஜெயசூர்யா (783), இங்கிலாந்தின் ஜேம்ஸ் ஆண்டர்சன் (780), ஆஸ்திரேலியாவின் நேதன் லயன் (746), இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா (746), இங்கிலாந்தின் ஆலி ராபின்சன் (746) ஆகியோர் முறையே 5 முதல் 10-வது இடங்களில் உள்ளனர்.

**வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று**

மழை பெய்ய உலகம் வாழ்ந்து வருவதால், மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத்தக்கதாகும்

*Advertisement*

# Congratulations

**Fuehrer™**
Retain
Improvements
Breakthrough

## Welcome to our Growth Life Journey








# Ab India karega claim zindagi ko



Max Bupa's new avatar, Niva Bupa brings in a new era for India. An era in which health insurance is not merely a tool to help you with your claims in the event of injury and hospitalisation. Instead, it's what sets you free. Free to claim the assurance of good health. Free to claim the confidence to step out and do the things you dream of. With its unmatched benefits like **30 minutes cashless claim processing, digital claim reimbursement and a network of over 7600 hospitals[#]**, Niva Bupa will give you the freedom to claim the countless magical moments that life has to offer.

INTRODUCING

Bupa
niva
Health Insurance

Say 'Hi' to us on WhatsApp: 9811956696 | Helpline: 1860-500-1000 | Website: www.nivabupa.com

**உலக செய்திகள்**

# இங்கிலாந்து மன்னர் மூன்றாம் சார்லஸுக்கு புற்றுநோய் பாதிப்பு



இங்கிலாந்து மன்னர் மூன்றாம் சார்லஸ், புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை அறிக்கை மூலம் பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது. 75 வயதான மன்னர் சார்லஸ் கடந்த 2023-ம் ஆண்டு மன்னராக முடிசூடிக் கொண்டார். அவரது தாயார் இரண்டாம் எலிசபெத் ராணி, 2022-ல் உயிரிழந்ததை அடுத்து மன்னராக பொறுப்பேற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இளவரசர்கள் வில்லியம் மற்றும் ஹாரியின் தந்தை. அண்மையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தார். இந்த சூழலில் அவருக்கு புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. நோய் கண்டறிதல் சோதனையின் மூலம் மன்னர் மூன்றாம் சார்லஸுக்கு புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. இதையடுத்து அவருக்கு அதற்கான மருத்துவ சிகிச்சை தொடங்கப்பட்டுள்ளது. பொதுவெளியில் நடைபெறும் நிகழ்வுகளில் அவர் பங்கேற்க வேண்டாம் என மருத்துவர்கள் பரிந்துரைத்துள்ளனர். அதே நேரத்தில் தனது வழக்கமான மற்ற பணிகளை மன்னர் மேற்கொள்வார். சிகிச்சை முறையில் பாசிட்டிவ் மனநிலையில் உள்ள மன்னர், விரைந்து பொது வாழ்வுக்கு திரும்புவார். ஊகங்களைத் தடுக்கவும், தான் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதை உலகெங்கிலும் உள்ள அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையில் அறிவித்துள்ளார் என பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.

# மியான்மரின் ரக்கைன் மாநிலத்தைவிட்டு உடனடியாக வெளியேறுங்கள்' - இந்தியர்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தல்



பாதுகாப்புச்சூழல் மிகவும் மோசமடைந்து வருவதால் மியான்மரின் ரக்கைன் மாநிலத்துக்கு இந்தியர்கள் செல்ல வேண்டாம் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. இதுகுறித்து மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாதுகாப்பு சூழல் மிகவும் மோசமடைந்து வருவதாலும், தரைவழி டெலிபோன் உள்ளிட்ட தொலை தொடர்புகளில் ஏற்பட்டுள்ள தடைகள், அத்தியாவசியப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறைகளைக் கருத்தில் கொண்டு இந்தியார்கள் யாரும் மியான்மரின் ரக்கைன் மாநிலத்துக்கு செல்ல வேண்டாம். ஏற்கெனவே ரக்கைனில் உள்ள இந்தியர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேறவும் அறிவுறுத்தப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2021ம் ஆண்டு பிப்ரவரி 1ம் தேதி மியான்மரில் ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதில் இருந்து ஜனநாயகத்தை மீட்டெடுக்கக் கோரி அங்கு பரவலாக வன்முறை சம்பவங்கள் நடந்து வருகின்றன. ரக்கைன் மாநிலம் மற்றும் நாட்டின் பல பகுதிகளில் கடந்த ஆண்டு அக்டோபர் முதல் ஆயுதம் தாங்கிய போராளி குழுக்களுக்கும் மியான்மர் ராணுவத்துக்கும் இடையே மோதல்கள் நடந்து வருகின்றன. இரண்டு தரப்புகளுக்கும் இடையேயான மோதல் கடந்த நவம்பர் மாதம் முதல் தீவிரமடைந்து வந்ததைத் தொடர்ந்து மியான்மரின் முக்கிய நகரங்கள் மற்றும் இந்தியாவின் எல்லையோர பகுதிகளில் பதற்றம் அதிகரித்துள்ளது. இதனால், மிசோரம் மற்றும் மணிப்பூர் மாநிலங்களில் உள்ள இந்திய எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்த கவலை அதிகரித்துள்ளது. மியான்மர் இந்தியாவுடன் தூதரக ரீதியிலான தொடர்பில் இருக்கும் அண்டை நாடுகளில் ஒன்று. இந்தியாவில் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள நாகாலாந்து மற்றும் மணிப்பூர் மாநிலங்கள் உட்பட வடகிழக்கு மாநிலங்களில் சுமார் 1,640 கி.மீ., தூர எல்லையை மியான்மர் பகிர்ந்து கொள்கிறது. கடந்த வாரம் மியான்மரில் அனைத்து வன்முறைகளை நிறுத்தவும், அனைவரையும் உள்ளடக்கிய கூட்டாட்சி ஜனநாயகத்துக்கு திரும்பும்படி இந்தியா அழைப்பு விடுத்தது. பிப். 1ம் தேதி இந்தியாவின் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ரன்தீர் ஜெய்ஸ்வால் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கூறுகையில், மியான்மரில் மோசமடைந்து வரும் நிலைமை எங்களை மிகவும் கவலையடைச் செய்துள்ளது. அது எங்களை நேரடியாக பாதிக்கிறது. மியான்மரின் அண்டை மற்றும் நட்பு நாடாக, மியான்மர் அனைத்து வன்முறைகளையும் கைவிட்டுவிட்டு, அனைவரையும் உள்ளடக்கிய கூட்டாட்சி ஜனநாயகத்துக்கு திரும்ப வேண்டும் என்று இந்தியா அறிவுறுத்துகிறது என்று தெரிவித்திருந்தார்.

# அமெரிக்காவை பலவீனமான நாடாகப் பார்க்கிறது இந்தியா - நிக்கி ஹேலி கருத்து


அமெரிக்காவை பலவீனமாகப் பார்க்கிறது இந்தியா. அமெரிக்கர்கள் வழிநடத்துவார்கள் என அது நம்பவில்லை என அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட விரும்பும் வேட்பாளார்களில் ஒருவரான நிக்கி ஹேலி தெரிவித்துள்ளார். அமெரிக்க ஊடகப் பேட்டி ஒன்றில் அவர் இவ்வாறாகத் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் பிரதான அரசியல் கட்சிகள் என்றால் ஜனநாயக கட்சி மற்றும் குடியரசு கட்சிகள்தான். ஜனநாயக கட்சி சார்பில் ஜோ பைடன் தற்போது அமெரிக்க அதிபராக உள்ளார். இந்த ஆண்டு (2024) அவரின் பதவிக்காலம் முடியவுள்ளதால் வரும் நவம்பர் மாதம் அதிபர் தேர்தல் நடக்கவுள்ளது. அதிபர் தேர்தலில் வேட்பாளராக போட்டியிட விருப்பம் உள்ளவர்கள் கட்சி உறுப்பினர்களின் ஆதரவைப் பெறவேண்டும். அதற்கு மாகாணங்கள் தோறும் வாக்குப்பதிவு நடைபெறும். இதில் குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரும், தெற்கு கரோலினா மாகாண முன்னாள் ஆளுநருமான நிக்கி ஹேலி ஆகியோர் களத்தில் உள்ளனர். இந்நிலையில், நிக்கி ஹேலி ஃபாக்ஸ் பிசினஸ் நியூஸ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி கவனம் பெற்றுள்ளது. அவருடைய பேட்டியில் இருந்து. அமெரிக்காவை பலவீனமான நாடாகப் பார்க்கிறது இந்தியா. ஜனநாயகக் கட்சி ஆட்சியின் கீழ் அமெரிக்கர்கள் உலகை வழிநடத்துவார்கள் என அது நம்பவில்லை. அமெரிக்காவுடன் நட்புறவைப் பேண இந்தியா விரும்பினாலும் கூட இப்போதைக்கு அமெரிக்கா மீது அதற்கு பெரும் நம்பிக்கையில்லை. ஆகையால், நடப்பு உலகளாவிய சூழலைக் கருதி இந்தியா புத்திசாலித்தனமான நகர்வுகளை மேற்கொள்கிறது. அதனாலேயே அமெரிக்காவைவிட ரஷ்யாவுடன் நெருக்கம் காட்டுகிறது. நான் இந்தியாவை அறிவேன். பிரதமர் மோடியிடம் நான் நேரடியாகவே பேசியிருக்கிறேன். இந்தியாவுக்கு அமெரிக்காவுடனான நட்புறவில் விருப்பம் தான் ஆனாலும் அவர்கள் இப்போதைக்கு அமெரிக்கா மீது சந்தேகத்தில் உள்ளனர். நாங்கள் பலவீனமாக இருப்பதாக உணர்கிறார்கள். அதனாலேயே ரஷ்யாவுடன் நெருக்கம் காட்டுகின்றனர். அங்கிருந்துதான் அவர்களுக்கு நிறைய ராணுவத் தளவாடங்கள் கிடைக்கின்றன. இந்தச் சூழலில் நாங்கள் எப்போது நம்பிக்கையை மீட்டெடுக்கிறோமோ அப்போது இந்தியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இஸ்ரேல், ஜப்பான், தென் கொரியா போன்ற நண்பர்கள் எங்களிடம் வருவார்கள். சீனா மீதான சார்பை குறைக்க ஜப்பான், இந்தியா பெருமுயற்சிகள் எடுத்துள்ளன. இத்தகைய சூழலில், அமெரிக்கா தனது கூட்டணி உறவுகளை வலுவாகக் கட்டமைக்கும் காலம். குடியரசுக் கட்சி அதனை மீட்டெடுக்கும். சீனா பொருளாதார ரீதியாக பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது. இந்தச் சூழலில் அவர்கள் அமெரிக்காவுடன் போருக்கு ஆயத்தமாகி வருகிறார்கள். அது அவர்கள் செய்யும் மிகப்பெரிய தவறு என்றார். இந்தியாவைப் பற்றிய நிக்கி ஹேலியின் பார்வை கவனம் பெற்றுள்ளது.

# CELEBRITY WISHES














































# CELEBRITY WISHES





















kotak life



Secure your family against the burden of loan repayment with our life insurance solutions.

Visit www.kotaklife.com or call us at 1800-209-8800 today.

Hum hain... hamesha

BEWARE OF SPURIOUS PHONE CALLS AND FICTITIOUS / FRAUDULENT OFFERS
IRDAI is not involved in activities like selling insurance policies, announcing bonus or investment of premiums. Public receiving such phone calls are requested to lodge a police complaint.

Kotak Mahindra Life Insurance Company Ltd. Regn. No.: 107, CIN: U66030MH2000PLC128503, Regd. Office: 2nd Floor, Plot #C- 12, G- Block, BKC, Bandra (E), Mumbai - 400051.
Website: https://www.kotaklife.com | WhatsApp: 9321003007 | Toll Free No. - 1800 209 8800. Ref. No. KLI/21-22/P-BB/1478.
Trade Logo displayed above belongs to Kotak Mahindra Bank Limited and is used by Kotak Mahindra Life Insurance Company Ltd. under license.

## அரசியல் செய்திகள்

## வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகையை தமிழில் மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்: அமைச்சர் சாமிநாதன் வலியுறுத்தல்



தமிழகத்தில் உள்ள வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் தமிழில் இடம்பெற வலியுறுத்துவது தொடர்பான கலந்தாய்வு கூட்டம் நேற்று தலைமைச் செயலகத்தில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் மற்றும் சி.வெ.கணேசன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், தமிழ் வளர்ச்சித் துறை செயலர் இல.சுப்பிரமணியன், இயக்குநர் ந.அருள், தொழிலாளர் நலத்துறை செயலர் குமார் ஜெயந்த், வணிகர் சங்கத் தலைவர் விக்கிரமராஜா உள்ளிட்டோர் பங்கேற்றனர். கூட்டத்தில், தமிழகத்தில் உள்ள வணிக நிறுவனங்கள், உணவகங்கள், கடைகள், வணிக வளாகங்கள் ஆகியவற்றின் பெயர்ப் பலகைகள் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முதலில் தமிழில் இடம்பெற வேண்டும். தொடர்ந்து ஆங்கிலத்திலும், அவரவர் தாய்மொழிகளிலும் 5:3:2 என்ற விதத்தில் அமையப் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. அனைத்து கடைகளிலும் தமிழில் பெயர்ப் பலகை வைக்குமாறு வணிகர் சங்கங்கள் வலியுறுத்த வேண்டும் என்று தொழிலாளர் துறை செயலர் குமார் ஜெயந்த் தெரிவித்தார். வரும்ஏப்ரல் மாதத்துக்குள் வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகை வைக்க நிறுவன உரிமையாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்று வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் விக்கிரமராஜாவிடம் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார். தமிழகத்தில் உள்ள அனைத்து வணிகர் சங்கங்கள் வாயிலாக அனைத்து கடைகள், வணிக நிறுவனங்களுக்கு பெயர்ப் பலகைகளில் முதன்மையாக தமிழிலும் பிறகு ஆங்கிலத்திலும் பெயர் இடம்பெற வேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டு செயல்படுத்தி வருவதாக விக்கிரமராஜா தெரிவித்தார்.

## அறநிலையத்துறை சார்பில் தமிழகத்தில் 7 கோயில்களில் மகாசிவராத்திரி விழா: மார்ச் 8-ம் தேதி நடைபெறுகிறது




இந்து அறநிலையத்துறை சார்பில் தமிழகத்தில் 7 கோயில்களில் மகாசிவராத்திரி விழா மார்ச் 8-ம் தேதி வெகுவிமரிசையாக நடைபெறுகிறது. இந்து சமய அறநிலையத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள ஆணையர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த கூட்டத்துக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை தாங்கினார். கூட்டத்தில் 1,000 ஆண்டுகள் பழமையான கோயில்களை புனரமைக்கும் வகையில் ரூ.304.84கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் 197 கோயில்களின் திருப்பணிகளில், 16 கோயில்களில் பணிகள் முழுவுற்றுள்ளன. இந்நிலையில், இதர தொன்மையான கோயில்களில் நடைபெற்றுவரும் திருப்பணிகளின் பணி முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தின் இரண்டாம் கட்டப் பயணத்தை 200 பக்தர்களுடன் பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலிலிருந்து தொடங்குவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. அதேபோல், மகா சிவராத்திரி விழா மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயில், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், பேரூர் பட்டீஸ்வரர் கோயில்களில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில்: இந்தாண்டு கூடுதலாக, மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் மற்றும் திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரர் கோயில் ஆகிய 2கோயில்களையும் சேர்த்து 7கோயில்களில் வருகின்ற மார்ச்8-ம் தேதி மகா சிவராத்திரி பெருவிழாவை ஆன்மிக சொற்பொழிவுகள் மற்றும் கலைநிகழ்ச்சிகளுடன் வெகு விமரிசையாக கொண்டாட எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

## பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வலியுறுத்தி பிப்.15-ல் அரசு அலுவலர்கள் வேலைநிறுத்தம்




பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் உள்ளிட்ட 10 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, வரும் 15-ம் தேதி ஒருநாள் அடையாள வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக தமிழ்நாடு அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சிப் பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு மாநில தலைமை ஒருங்கிணைப்பாளர் கே.கணேசன் கூறினார். இதுகுறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: திமுக தனது தேர்தல் வாக்குறுதியில் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்துவிட்டு, பழைய ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்தப்படும் என்று உறுதியளித்தது. ஆனால், இதுவரை அதை செயல்படுத்தவில்லை. இந்த திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும். அதேபோல, நிதிப் பற்றாக்குறையால் நிறுத்தி வைக்கப்பட்ட சரண் விடுப்பு சலுகையையும் மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு அலுவலர்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை, ரூ.15 ஆயிரத்துக்கும் குறைவான மாத ஊதியம் பெறும் இடைநிலை, முதுகலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாட்டைக் களைதல், அரசுத் துறைகளில் காலி பணியிடங்களை நிரப்புதல், சத்துணவு, அங்கன்வாடி, துப்புரவுப் பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்குதல் உள்ளிட்ட 10 அம்சக் கோரிக்கைகளை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இவற்றை வலியுறுத்தி வரும் 15-ம் தேதி ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட உள்ளோம். மேலும், அன்று வட்டக் கிளைகளில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும். பின்னரும் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால், வரும் 26-ம்தேதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் தொடங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# புத்தகத்தை காதலி




நான் இந்த தலைப்பை பற்றி எழுதுவதற்கு முன்னர் ஔவை பாட்டியை நினைவு கூற விரும்புகின்றேன். ஔவையிடம் ஒரு அரசன் கேட்கிறான், உங்களுக்கு இனியது எது?

இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியை தொழுதல்
அதனினும் இனிது அறிவினர் சேர்தல்
அதனினும் இனிது அறிவுடையோரை கனவிலும் நினைவிலும் காண்பது தானே

ஏகாந்தம் என்றால் என்ன? தனிமை (பற்றற்ற நிலை)
ஆதியை தொழுவது - கடவுளை வணங்குவது
அறிவினர் சேர்த்தல் - சான்றோர்களோடு நட்பு பாராட்டுதல்
அறிவுடையோரை கனவிலும் நினைவிலும் காண்பது

புத்தகம் படித்தல் ..
எவன் ஒருவன் தினமும் புத்தகத்தை படிக்கின்றானோ இந்த உலகத்தை ஆள்வான்.
திருக்குறளை படித்தால் திருவள்ளுவர் நமக்கு நண்பர், குரானைப் படித்தால் அல்லாஹ் நமக்கு நண்பர். பைபிளை படித்தால் இயேசு நமக்கு நண்பர். பகவத் கீதையை படித்தால் கிருஷ்ணர் நமக்கு நண்பர். தினமும் படி. புத்தகத்தை படி. எதிர்காலத்தில் உன் வரலாற்றை மற்றவர்கள் படிப்பார்கள்.
அக்னி சிறகுகள் புத்தகத்தை படித்தால் உனக்கு வெற்றி சிறகுகள் முளைக்கும்.
நிறைய புத்தகத்தை படித்த அப்துல் கலாம், நம் நாட்டின் குடியரசுத் தலைவர்.
நிறைய புத்தகங்கள் எழுதிய ராபின் ஷர்மா, உலகத்தின் தலைசிறந்த பயிற்சியாளர். நிறைய புத்தகங்கள் விற்ற ஜெப் பெசோஸ், உலக பணக்காரர்களில் ஒருவர்.
புத்தகத்தை தொட்டால் போதும், வெற்றி உன் பக்கம். புத்தகத்தை காதலித்தால், நீ தான் நாளைய தலைவன். உன் தலைவிதியை மாற்றி எழுதவேண்டுமா, தினமும் படி, அன்போடு படி, உன் அறிவுப்பசி தீரும்வரை படி, யாருக்காவது பரிசளிக்கவேண்டுமா, புத்தகத்தை பரிசாக கொடு. உன் சந்ததி நாளை உலகம் போற்ற வாழவேண்டுமா, வீட்டில் ஒரு நூலகத்தை உருவாக்கு. நீ தமிழனா, உன் வீட்டில் திருக்குறள் புத்தகம் இல்லையென்றால் நீ தமிழனே அல்ல. தமிழன் என்று சொல், நெஞ்சம் நிமிர்ந்து நில். திருக்குறளை படித்து உலகத்தை அறிந்து கொள்.

**K.A. SIVAKUMAR**
Co-Founder & CEO
Bell Curve Strategic Consultancy Pvt. Ltd.
Youtube: F3 Sivakumar
Mobile: 9940415942 / 9444201230
Mail: sivakumar.ka@thebellcurve.in



# ராசிபலன்

**மேஷம்**

ராசிநாதன் செவ்வாய், கர்ம ஸ்தானத்தில் இருக்கின்றார். அவரோடு வார இறுதியில் சுக்கிரன் இணைந்து, சுக்கிர மங்கள யோகத்தை உருவாக்கப் போகிறார். இதனால், சுக்கிரனுக்கும் செவ்வாய்க்கும் காரகத்துவமான தொழில்களான வீடு, மனை வாங்குதல் மற்றும் கலைத் தொழில்கள் பிரகாசிக்கும். வீடு மனை வாங்கும் யோகமும் உண்டு. புதன் பத்தாம் இடத்தில் சூரியனோடு இருந்து புத ஆதித்ய யோகத்தை உண்டாக்குவதும் சிறப்பு. ஜந்துக்குரிய சூரியன் வார இறுதியில் லாப ஸ்தானத்தில் சனியோடு இணைகிறார். இந்த இடங்களும் சூரியனுக்கு உகப்பான இடங்கள்தான். அரசாங்க ரீதியாக வெற்றிகரமாக முடியும். பதவி உயர்வு கிடைக்கும். கௌரவம் ஓங்கும்.

**ரிஷபம்**

இதுவரை அஷ்டமத்தில் இருந்த சுக்கிரன் இனி பாக்கிய ஸ்தானத்திற்கு செல்ல இருக்கின்றார். அங்கே சூரியன் செவ்வாயோடு இணைவது யோகம் ஆகும். பொருளாதார ரீதியாக சிறந்த மாற்றங்கள் வருவதற்கான வாய்ப்புண்டு. கொடுத்த கடன்கள் வசூலாகின்றன. லாபம் அதிகரிக்கும். கலைஞர்களுக்கு மிகச்சிறந்த வாய்ப்பு வருவதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. தனாதிபதி புதன், பாக்கியஸ்தானத்தில் சூரியனுடன் சேர்ந்து புத ஆதித்ய யோகத்தை ஏற்படுத்துகின்றார். சுக்கிரனோடு செவ்வாய் சேர்ந்து சுக்கிர மங்கள யோகமும் இருக்கின்றது. சுகஸ்தானத்தை குரு பார்க்கின்றார். லாபத்தில் ராகு இருக்கின்றார். நல்ல அற்புதமான பலன்களைத் தரும். நினைத்த காரியங்கள் முடியும் என்றாலும் சிரம நிலைகள் குறுக்கீடாக முயற்சியை கைவிட வேண்டாம்.

**மிதுனம்**

ராசிநாதன் புதன் வார இறுதியில் பாக்கியஸ்தானத்திற்கு செல்லுகின்றார். இது ஒரு சிறந்த அமைப்பு. அதோடு வார இறுதி வரை சுக்கிரன் உங்கள் ராசியைப் பார்ப்பதால், குடும்ப உறவுகள் சிறப்பாக இருக்கும். அவர் அஷ்டமஸ்தானத்திற்கு மாறினாலும் சுகம் குறையாது. புதிய ஆடை ஆபரணங்களை வாங்குவீர்கள். லாபஸ்தானத்தில் குரு இருந்து ஐந்தாம் இடத்தைப் பார்ப்பதால், குழந்தை பிறப்பதற்காகக் காத்திருக்கும் தம்பதிகளுக்கு சந்தான விருத்தி ஏற்படும் வாய்ப்புகளும் உண்டு. கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து மகிழ்ச்சியோடு வாழ்க்கூடிய சூழல் ஏற்படும்.

**கடகம்**

ஆறாம் இடத்திலிருந்து இதுவரை சில தேவையற்ற பிரச்னைகளையும் மனதில் கவலைகளையும் உருவாக்கிய சுக்கிரன், வார இறுதியில் ஏழாம் இடம் சென்று உங்கள் ராசியைப் பார்க்கின்றார். அங்கே செவ்வாயோடு சுக்கிர மங்கள யோகத்தை ஏற்படுத்துகிறார். அரசாங்க காரியங்கள் உங்களுக்குச் சாதகமாக இருக்கும். கொடுத்த கடன்கள் வசூல் ஆகின்றன. தொழில் வளர்ச்சி போட்டிகள் இருந்தாலும்கூட எனினும் முன்னேறும் பலம் கிடைக்கும். சில இடமாறுதல்கள் உங்களுக்கு ஆதாயத்தைத் தரும். மூன்றில் உள்ள கேதுவும் ஒன்பதில் உள்ள ராகுவும் அஷ்டமச் சனியால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும். ஆன்மிகப் பயணம், தெய்வ தரிசனம் உண்டு.

**சிம்மம்**

ராசிநாதன் சூரியன் வாரத்தின் கடைசி நாள் வரை நன்மை தரும் அமைப்பில் இருக்கின்றார். அதுவரை அரசாங்க காரியங்கள், விண்ணப்பங்கள், வேலைக்கான முயற்சிகள் இவைகளை எல்லாம் சாதகமாகக் கொள்ள முயற்சிக்கவும். தவறவிட்டால் தாமதமாகும். பாக்கியஸ்தானத்தில் குரு இருந்து உங்கள் ராசியை பார்வையிடுவதால், உங்கள் எண்ணங்கள் நேர்வழியையும் வெற்றிக்கான பாதையையும் முறையாகத் தேர்ந்தெடுக்கும். சவால்களை எதிர்கொள்ளும் ஏழாம் இடத்தில், சனி இருக்கிறார். புதிய வாகனங்கள் வாங்குவீர்கள். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமான வழக்குகள் சாதகமாகும். மதிகாரிகளிடம் நன்மதிப்பு கிடைக்கும்.

**கன்னி**

ராசி நாதன் புதன் இதுவரை ஐந்தாம் இடத்தில் இருந்தார். வார இறுதியில் அவர் ஆறாம் இடத்திற்கு சென்று அமரப் போகின்றார். அங்கே சூரியனோடு கூடுவதால் புத ஆதித்ய யோகம் ஏற்படும். நான்காம் இடத்தில் இருந்த சுக்கிரன் ஐந்தாம் இடத்துக்கு மாறுவதாலும் அங்கே செவ்வாயோடு இணைவதாலும் பணச் சிக்கல்கள் தீரும். கலைஞர்களுக்கு நல் வாய்ப்பு உண்டு. சனி பகவான் மிகவும் சாதகமான நிலையில் இருப்பதால், தொழில் அபிவிருத்தி செய்வதால், லாபம் அதிகரிக்கும். ஏற்றுமதி துறை வெற்றிகரமாக நடக்கும். வேலைக்கு முயற்சிக்கும் நண்பர்களுக்கு அவர்கள் விரும்பியபடி நல்ல வேலை அமையும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்**

ராசிநாதன் சுக்கிரன், வார இறுதியில் மகர ராசியில் நுழைந்து செவ்வாயோடு இணைகிறார். சூரியன் விரைவில் பஞ்சமஸ்தானம் சென்று சனியோடு இணைகிறார். குரு உங்கள் ராசியைப் பார்ப்பதாலும், ஆறாம் இடத்தில் ராகு இருப்பதாலும் உங்கள் செயல்களில் அதிக வெற்றிகள் ஏற்படும். சிறசில சங்கடங்கள் இருந்தாலும் அவைகளால் பெரிய பின்னடைவுகள் இருக்காது. குரு உங்கள் ராசிக்கு மூன்றாம் இடத்தைப் பார்ப்பதாலும் அங்கே ராசி நாதன் இருப்பதாலும் எந்த செயலையும் உற்சாகத்தோடும் தைரியத்தோடும் செய்வீர்கள். திருமணமான பெண்களுக்கு குழந்தை செல்வம் ஏற்படும் சிரம அமைப்புகளும் உண்டு.

**துலாம்**

ராசிநாதன் செவ்வாய் 3-ம் இடத்தில் இருக்க ஏழுக்குரிய சுக்கிரன் அவரோடு இணைகிறார். புதன் சூரியன் சனி சுக்கிரன் இவர்களின் இணைப்புகள் மூன்றாம் இடத்தில் ஏற்பட்டு உங்கள் பாக்கியஸ்தானத்தை பார்வையிடுவதால் துன்பங்கள் ஏற்படாமலும், அதிலிருந்து மீளும் வழியை உடனடியாகக் கண்டு பிடித்து விடுவீர்கள். புத்திசாலித்தனமும் உங்களை முன்னேற்றப் பாதையை நோக்கி அழைத்துச் செல்லும். ராசிநாதன் பல மடைத்திருப்பதால் குடும்பத்திலும் பிரச்னைகளை குறைப்பார். புதன் அனுகூலமான நிலையில் இருக்கிறார். வீடு மனை வாங்கும் யோகம் உண்டு. அரசாங்க காரியங்கள் பலிதமாகும். 11-ல் உள்ள கேது வெற்றி வாய்ப்புகளைத் தருவார்.

**தனுசு**

ராசியில் இதுவரை இருந்த சுக்கிரன், வார இறுதியில் தன குடும்ப ஸ்தானத்தில் பெயர்ந்து அங்கே செவ்வாயோடு இணைந்து சுக்கிர மங்கள யோகத்தைத் தருகின்றார். பொருளாதாரம் மேம்படும். பணவரவு அதிகரிக்கும். கொடுக்க வேண்டிய கடன்களை அடைத்து விடலாம். வரவேண்டிய பணமும் வசூல் ஆகின்றது. கலைஞர்களுக்குத் புதிய வாய்ப்புகளும் வருமானமும் ஏற்படும். தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். ஆடை ஆபரணச் சேர்க்கை ஏற்படும். சில பேர் புதிய வாகனங்களை வாங்குவீர்கள். கணவன், மனைவி உறவுகள் அன்பு கொண்டதாக இருக்கும். வார இறுதியில் சூரியன் மூன்றாம் இடத்திற்கு மாறுவது அரசாங்க ரீதியான நன்மையையும், உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வையும் தரும். வேலை தேடுபவர்களுக்கு புதிய வேலை கிடைக்கும்.

**மகரம்**

விரய ஸ்தானத்தில் இருந்த சுக்கிரன் செவ்வாயோடு இணைகிறார். அவர் ராசியில் இணைந்து சம்பந்தமானதை பார்வையிடுவது நல்லது. நண்பர்கள் உதவுவார்கள். கணவன் மனைவி சிக்கல்கள் தீரும் சாதகமான ஆலோசனைகள் கிடைக்கும். கணவனுக்கு மனைவியும், மனைவிக்கு கணவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்வார். செலவுகளுக்கு ஏற்ற வருமானம் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. மூன்றாம் இடத்தில் ராகு இருப்பது எதிர்பாராத சில நற்பலன்களையும் வெற்றிகளையும் தரும். வெகு காலம் வராமல் இருந்த பதவி உயர்வு கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்**

வார இறுதியில் ராசிநாதன் சனியோடு சப்தமாதிபதி சூரியன் வந்து இணைகிறார். 12-ஆம் இடத்தில் செவ்வாயோடு சுக்கிரனும் இணைந்து சுக்கிர மங்கள யோகத்தை ஏற்படுத்துகின்றனர். சுக்கிரன் பன்னிரண்டாம் இடத்தில் இருப்பது சுகங்களை அதிகரித்து லாபத்தை தரவல்லது என்று ஜோதிட நூல்கள் கூறும். சுப செலவுகள் அதிகரிக்கும். மூன்றாம் இடத்தில் இருந்து குரு லாபஸ்தானத்தைப் பார்த்தால், தொழிலில் போட்டியை மீறி லாபம் ஏற்படும். கலைத்துறையினருக்கு வாய்ப்புகள் உண்டு.

**மீனம்**

ராசிநாதன் குரு இரண்டாம் இடத்தில் இருந்து சுபஸ்தானமான புத்தாம் இடத்தைப் பார்வையிடுகிறார். பெரும்பாலான கிரகங்கள் மீன ராசிக்கு நன்மையை தரும் அமைப்பில் இல்லை என்றாலும்கூட ராசிநாதனுடைய வலுவாலும் பார்வையாலும் எல்லாவற்றையும் எதிர்கொண்டு அமைதியாக கடந்து விடுவீர்கள். தொழில் போட்டிகள் உண்டு. வெளியூர் பயணங்கள் உண்டு. பொதுவாக வெளிநாட்டு வேலை தேடுவோர்களுக்கு சில மறைமுக ஆதாயங்கள் உண்டு.

# ஆன்மீகம்

## ஆனந்த வாழ்வருளும் ஆனந்த கணபதி



**கிரீடம் இல்லாத விநாயகர்**

நாம் எத்தனையோ விதவிதமான வடிவங்களில் இருக்கும் விநாயகரைக் கண்டிருப்போம். வணங்கியிருப்போம். ஆனால் கிரீடம் இல்லாத குழந்தை விநாயகரைப் பார்த்திருப்போமா? அவரைக் காண நாம் செல்ல வேண்டிய தலம் தர்மபுரி காவேரிப்பட்டினம் அருகே உள்ள பெண்ணேசுர மடமே ஆகும்.

**ஆனந்த வாழ்வருளும் ஆனந்த கணபதி**

உமையாள்புரத்தில் உள்ள ஆனந்த மகாகணபதி கோயில் குறிப்பிடத்தக்கது. சிறப்புடையதும்கூட. சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு விநாயகர் இப்போது இருக்கும் இடத்திலேயே ஒரு அரசமரத்தின் அடியிலேயே இருந்ததாகவும், ஒருசமயம் அந்த அரசமரம் வேருடன் விழவே அவதூத சுவாமிகள் ஒருவர், மான்தோல் யந்திரம் வைத்து விநாயகரை அவ்விடத்திலேயே பிரதிஷ்டை செய்தார் என்றும் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. கோயிலை ஒட்டி ஒரு மடம் இருக்கிறது. நீராடி தூய உடை உடுத்தி கோயில்

நந்தவனத்திலேயே மலர் பறித்து தொடுத்தும் அங்கேயே நிவேதனத்தையும் தயாரித்து அர்ப்பணிக்கிறார்கள். ஆசாரம் காரணமாக இந்த மடத்திற்குள் பெண்கள் அனுமதிக்கப் படுவதில்லை. சங்கடஹர சதுர்த்தி, விநாயகர் சதுர்த்தி, ஆவணி மாத அமாவாசைக்கு முன் நடத்தப்படும் நிறைபணி உற்சவம் ஆகியவை இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

**அய்யனாருக்கு இடம் கொடுத்த விநாயகர்**

தர்ம சாஸ்தா என்று அழைக்கப்படும் அய்யனார், நமக்குப் பல நன்மைகளை அளிக்கக் காத்திருக்கிறார். கூத்தூர் என்று அழைக்கப்படும் ஊருக்கு நடனபுரி என்ற பெயரும் இருந்துள்ளது. ஆதியில் இங்கு ஒரு விநாயகர் கோயில் மட்டும் இருந்துள்ளது. ஒருசமயம் வணிகர்கள் சிலர் மலையாள தேசம் சென்று ஏலக்காய், கிராம்பு, மிளகு வாங்கிக்கொண்டு அத்துடன் பூரணை, புஷ்கலையுடன் கூடிய அய்யனார் சிலையையும் எடுத்து வந்துள்ளனர். தஞ்சாவூர் செல்லும் வழியில் இந்த ஊரில் தங்கி மறுநாள் கிளம்பும்பொழுது அய்யனார் சிலையை அங்கேயே மறந்து வைத்து விட்டுச் சென்று விட்டனர். அய்யனார், விநாயகரிடம், தான் தங்குவதற்கு இடம் அளிக்கும்படி வேண்டிக்கொள்ள, விநாயகரும் சற்று நகர்ந்து இடம் கொடுத்ததாக கூறுவார்கள். இப்பொழுதும் இங்குள்ள விநாயகருக்கு, சாஸ்தா விநாயகர் என்றே பெயர். இங்குள்ள தர்ம சாஸ்தா பல குடும்பங்களின் குலதெய்வமாக உள்ளார்.

**ஆஞ்சநேயருடன் விநாயகர்**

திருச்சி உறையூர் நவாப் தோட்டம் என்ற பகுதியில், வயல் சூழ்ந்த இடத்தில் அமைந்துள்ள கோயிலில், ஒரே சந்நிதியில் ஆஞ்சநேயர் எழுந்தருளியிருக்க, அவரது வலது பக்கத்தில் விநாயகப் பெருமான் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். இந்த இருவரையும் சனி பகவான் பிடிக்க முடியாமல் திரும்பிச் சென்றுவிட்டார் என்று புராணம் கூறுகிறது. எனவே, இவர்களை ஒரே சந்நதியில் வழிபட சனியின் தாக்கம் விலகும் என்பது ஐதீகம்.

**முத்தாலங்குறிச்சி முக்குறுணி விநாயகர்**

திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி நதிக்கரையில் தட்சிணவாகினியாக வடக்கிலிருந்து தெற்கு முகமாகப் பாயும் கரையோரங்களில் பல கோயில்கள் உள்ளன. அந்த வகையில் 'முத்தாலங்குறிச்சி முக்குறுணி விநாயகர்' புகழ் பெற்று விளங்குகிறார். பிரமாண்டமான தோற்றத்தில் காட்சி தரும் இந்த விநாயகருக்கு முக்குறுணி (18 படி) அளவு அரிசியை மாவாக்கி ஒரே ஒரு பெரிய அளவில் மோதகம் செய்து படைப்பார்கள். கூரையில்லாமல் வேப்பமரத்தடியில் கம்பீரமாக அமர்ந்திருக்கும் இந்த விநாயகருக்கு கூரை போட முயற்சிக்கையில் பல தடங்கல்கள் ஏற்பட்டன.

அதனால் கூரை போடுவதற்கு அமைக்கப்பட்ட நான்கு கல் தூண்கள் அப்படியே இன்றளவும் உள்ளன. சுமார் இரண்டரை அடி உயரத்துடன் கம்பீரமாக வேப்ப மரத்தடியில் அமர்ந்திருக்கும் இந்தப் பிள்ளையாருக்கு எண்ணெய்க் காப்பு செய்ய வேண்டும் என்றால் பத்து லிட்டர் எண்ணெய் தேவைப்படும். வஸ்திரம் அணிவிக்க எட்டுமுழ வேஷ்டி வேண்டும். இரண்டு பேர் சேர்ந்துதான் வஸ்திரம் சாத்துவார்கள். முப்புரி நூலும், பேழை வயிறுமாக அமர்ந்திருக்கும் கோலத்திலிருக்கும் விநாயகரை பக்தர்கள் அருகில் ஓடும் தாமிரபரணி நதியிலிருந்து நீர் சேகரித்து அபிஷேகித்து வழிபடுவது வழக்கம்.

CHENNAI

## PETROL, DIESEL PRICES REMAIN UNCHANGED FOR 460 RD DAY IN CHENNAI



CHENNAI: In Chennai, the price of a litre of petrol and diesel has been constant over the last 630 days at Rs.102.63 and Rs. 94.24 respectively. petrol and diesel prices still remain unchanged.
The government has approved the practice of daily determination of fuel prices in line with international crude oil prices.

Henceforth, oil companies are regulating petrol and diesel prices on a daily basis, keeping a check on fluctuation.

**METRO PEOPLE**
**English & Tamil Weekly**

Editor:
**S. SUDHA**

Sub-Editor:
**S. Surendran**

Reporter:
**P. Dinesh**
**M. Saravanan**

Photographer:
**S.Rishikesh**

Layout Artist:
**R. Bala Suresh**

**Publication Address**

Office No. F, Door No.190,
Old No. 758A, Second Floor
Mount Chambers Anna Salai,
Chennai - 600 002.

**75500 01222**

# DRI BUSTS A DIAMOND SMUGGLING ATTEMPT AT CHENNAI AIRPORT



Sleuths from from the Directorate of Revenue Intelligence (DRI), intercepted a passenger at Anna International Airport, Chennai on Wednesday and foiled an attempted diamond smuggling and seized diamonds worth over Rs 2.3 crore.
According to a press note the suspect was about to board a flight to Bangkok when DRI officers intercepted him and thoroughly checked his baggage.

The search revealed an ingenious concealment of diamonds.
The total recovery amounted to 1003.99 carats of diamonds valued at Rs 2.33 crore hidden to evade detection.

The arrested passenger is currently under investigation, with authorities delving deeper into the potential network behind this smuggling attempt, claimed the press note.

# 41 ADDL ESCALATORS TO COME UP AT THESE 22 METRO STATIONS: CHECK HERE



For a better travel experience, Chennai Metro Rail Limited (CMRL) has planned to add 41 new escalators at selected Metro stations in the city.

According to a CMRL press note, additional 41 escalators are planned to be installed at 22 Metro Rail stations to enable passengers to move between stations without hindrance and transfer to other modes of transport. Anna Nagar East, Anna Nagar Tower, Shenoy Nagar, Thirumangalam, Little Mount, Washermenpet, Govt Estate, Ekkattuthangal, Teynampet , High Court, Thousand Lights, Mannady, St. Thomas Mount, Tondiarpet, Nehru Park, Egmore, Nanganallur, Guindy, AG-DMS, Thiagaraya College and Nandanam Metro station will have additional escalators, stated a report.
According to a Maalaimalar report, currently 3 lakh passengers' footfall is recorded at Chennai Metro Rail on a daily basis. Various facilities have been made to connect metro rail passengers with other public transport.

# PROBE ON TO TRACE SOURCE OF AK47 BULLETS IN TAMBARAM



The Tambaram police registered a case under three sections and are investigating who fired the bullet at Advocate's house two days ago.
On Tuesday night unidentified men fired a bullet at the house of the High Court Advocate Thyagarajan (50) in Meenambal Street while his wife Priya was alone in the house. The bullet shattered the glass window on the first floor of the house and immediately the Tambaram police were alerted. The police team who rushed to the spot recovered the bullet and browsed the CCTV in the locality to identify the person who fired the bullet.

During the investigation, the police on Wednesday evening recovered five used bullets strewn on the roadside close to Meenambal street. They found all the six bullets recovered were AK47 variants that would be used by the policemen and security personnel.
The police also investigated whether the bullets came from the IAF ground which is 3.5 kilometres away from Thyagarajan's house but it was also found to be not possible since the maximum range of AK47 bullets is 1.5 kilometres. On Thursday the police registered a case under three sections 336, 427, and 287 IPC and further investigation is on to find how the bullets came into the locality.

TAMILNADU

## STATE GETS JUST 29% BACK ON TAX PAID, SAYS UDHAY



Minister for Youth Welfare and Sports Development Udhayanidhi Stalin said the state is receiving less in returns from the central government despite paying higher taxes. Speaking at a welfare distribution function in Erode, Udhayanidhi said though Tamil Nadu contributed six lakh crore as tax since 2014, Central government has given only two and a half lakh crore in return.

"For every one rupee given, we receive only 29 paise in return. Despite such a financial crunch, Chief Minister MK Stalin has allocated funds to implement various welfare projects for women. This Dravidian model of government takes extra care in implementing schemes for betterment and economic prosperity of women," he said. Stating that self-help groups were started 30 years ago by former CM M Karunanidhi to provide financial independence to women, Udhayanidhi said. Calling the women of SHGs as brand ambassadors of projects implemented by the state government, Udhayanidhi asked women to take promote those schemes among more people. "Members of 37,305 women SHGs were given Rs 2,504 crore loan across Tamil Nadu,

## DMK MEMBERS TURN UP IN LOK SABHA WEARING BLACK ROBES IN PROTEST

The DMK members on Thursday participated in Lok Sabha proceedings wearing black robes in protest against Centre over non allocation of requisite funds to Tamil Nadu in the interim budget.

"We are wearing black robes in protest against Centre not releasing flood relief funds," DMK member G Selvam said.

The DMK has been raising the issue of non-allocation of funds for the last few days both inside and outside Parliament.

Its leaders, TR Baalu and A Raja, have raised the issue during Question Hour and Zero Hour in the House.

## ED TAKES UP DVAC'S BRIBING CASES BY REALTY FIRMS, STARTS RAIDS




: Sleuths from the Enforcement Directorate on Friday started raids around 10 premises of three promoters of well known realty firms and people connected to the firms in Chennai in connection with a PMLA case.

ED's PMLA case is based on FIR registered by the Directorate of Vigilance and Anti-Corruption last week against T.

Udayakumar, managing director, Landmark Housing Projects Limited, Sunil Khetpalia and Maneesh Parmar, both directors of KLP Projects Private Limited, unknown officials and MPs, MLAs etc.The DVAC case relies on the statement of Udayakumar before the Income Tax authorities wherein he revealed that cash payments to the tune of Rs. 50 crore was paid to various persons, including MPs, MLAs Corporation ward members and certain government officials to get their help for construction of multi-storied apartments at Binny Mill Campus on the Perambur Barracks Road in the city between 2015 and 2017.

To construct the apartment complex in 14.16 acres of land Udayakumar and two other builders had to pay bribes to the tune of Rs. 50 crore to officials and elected politicians to get approval. The DVAC had named certain MP and MLA in the list bribe recievers. One MLA who allegedly received money then is a minister now in the DMK cabinet.

## DON'T AUCTION ALLIANCE CHOICE, DK LEADER ADVISES PMK, DMDK



: Both PMK and DMDK should stop auctioneering and choose their alliance sensibly for the upcoming Lok Sabha polls, said DK president K Veeramani here on Thursday.

Speaking to reporters in Tiruchy in the sidelines of a protest organised by CPM against the Governor and the Union government, Veeramani said, the Centre is in the practice of threatening the non-BJP state governments through the Governors. Without discharging their Constitutional duties the Governors act as per the direction of the BJP leaderships, he alleged. Defending the statement of TR Baalu in the parliament against the Union minister L Murugan, Veeramani said, there was nothing wrong in the statement. The DMK leader has been speaking against the Union government for failing to disburse funds for the flood-hit Tamil Nadu, Veeramani said.

"What Baalu said in the house is that the minister Murugan who himself is from Tamil Nadu failed to get funds for flood affected districts in Tamil Nadu. It was wrongly interpreted as though Baalu had discriminated against the minister dragging in his caste", he said and claimed that it showed the functioning style of RSS.

The DK president appealed to PMK and DMDK, negotiating an alliance for the upcoming Lok Sabha polls, not to put into auction their political stand. "It is not good for democracy. Let them choose their alliance sensibly," he added.

Earlier, the protesting members raised slogans against the Governor RN Ravi and the Union government alleging step-motherly treatment to the non-BJP states.

NATION

# PARLIAMENT PASSES BILLS FOR OBC QUOTA IN LOCAL BODIES IN J-K, EXPAND LIST OF SCHEDULED TRIBES

The Rajya Sabha on Friday passed three legislations relating to Jammu and Kashmir including the bill to provide reservation to Other Backward Classes in local bodies to bring consistency in the local bodies' laws of the Union territory with the provisions of the Constitution.

Rajya Sabha passed the Jammu and Kashmir Local Bodies Laws (Amendment) Bill, 2024, Constitution (Jammu and Kashmir) Scheduled Castes Order (Amendment) Bill, 2024 and Constitution (Jammu and Kashmir) Scheduled Tribes Order (Amendment) Bill, 2024. The three bills have been passed by Lok Sabha. Minister of State for Home Nityanand Rai replied to the debate on the Jammu and Kashmir Local Bodies Laws (Amendment) Bill, 2024. Minister of Social Justice and Empowerment Virendra Kumar answered the debate on the bill relating to Scheduled Castes Order and Union Tribal Affairs Minister Arjun Munda to the bill relating to Scheduled Tribes Order. Munda said that the three bills brought after the abrogation of Article 370 were aimed at giving justice to the people of Jammu and Kashmir. He said the people of Jammu and Kashmir will get "political reservation for the first time".The Jammu and Kashmir Local Bodies Laws (Amendment) Bill, 2024 seeks to provide reservation to Other Backward Classes in the panchayats and the municipalities in Jammu and Kashmir and to bring consistency in the local bodies laws of the Union territory with the provisions of the Constitution. It seeks to amend the Jammu and Kashmir Panchayati Raj Act, 1989, the Jammu and Kashmir Municipal Act, 2000 and the Jammu and Kashmir Municipal Corporation Act, 2000. Officials said that provisions pertaining to state Election Commissioner in the Jammu and Kashmir Panchayati Raj Act "are at variance" with the provisions of the Constitution. They said said Jammu and Kashmir administration had recommended the inclusion of the Valmiki community as a synonym of Chura, Bhangi, Balmiki, Mehtar at serial number 5 in the list of Scheduled Castes of Union territory of Jammu and Kashmir. The Constitution (Jammu and Kashmir) Scheduled Castes Order (Amendment) Bill, 2023 proposes to amend the Schedule of the Constitution (Jammu and Kashmir) Scheduled Castes Order, 1956 for inclusion of 'Valmiki'. The officials said that the Jammu and Kashmir administration has requested for inclusion of the "Gadda Brahmin", "Koli", "Paddari Tribe" communities and "Pahari Ethnic Group" in the list of Scheduled Tribes. The Constitution (Jammu and Kashmir) Scheduled Tribes Order (Amendment) Bill, 2023 proposes to amend the Constitution (Jammu and Kashmir) Scheduled Tribes Order, 1989.

# PROUD MOMENT FOR ALL INDIANS: TELANGANA CM ON BHARAT RATNA FOR NARASIMHA RAO




Telangana Chief Minister A. Revanth Reddy on Friday said conferring Bharat Ratna to former Prime Minister P.V. Narasimha Rao is a proud moment for all Indians. Speaking in the state Assembly on Friday, he expressed happiness over the decision to confer the highest civilian award on him posthumously and congratulated his family."Though belated it is a proud moment for all Indians," he said, recalling the contributions made by the former Prime Minister.Revanth Reddy said PV was the only Telugu 'bidda' (son) and Telangana bidda who went on to become the Prime Minister."PV brought economic reforms to take India ahead on the path of development and enabled it to compete with other countries of the world," the Telangana CM said.He said PV earlier fought against Nizam and the repression by razakars to play a key role in liberation of Hyderabad state.Revanth Reddy said on his behalf and on behalf of the Assembly and people of the state, he congratulated his family members, supporters and Congress leaders who supported his political rise at every step.He especially mentioned the name of Sonia Gandhi saying she helped him become the Prime Minister.Earlier, the Chief Minister posted on X that Bharat Ratna for PV is a matter of pride.He stated that Bharat Ratna for the PV, who was an economic expert and a polyglot, filled the hearts of all of us children of Telangana with joy.He also hailed Bharat Ratna for former Prime Minister Charan Singh, L. K. Advani, Karpoori Thakur and eminent agriculture scientist Swaminathan. Deputy Chief Minister Mallu Bhatti Vikramarka, industries minister D. Sridhar Babu and other ministers and leaders of Congress party expressed their delight over Bharat Ratna for Narasimha Rao.

# "WILL BUILD AS MANY SCHOOLS AS SUMMONS SENT": DELHI CM ARVIND KEJRIWAL HITS OUT AT AGENCIES

: Delhi Chief Minister Arvind Kejriwal who has been evading his appearance before the investigators in the alleged Excise Policy scam took a dig at the Central agencies and the Union government on Friday and said that as many summons we are sent, the AAP will build those many schools.

After announcing the foundation stone for a new school building in the national capital's Mayur Vihar on Friday, the Delhi Chief Minister posted on X, "We will build as many schools as you send summons. You do your religion, we will do ours."

Earlier on Thursday, the Delhi Chief Minister accused the central government of "unleashing" investigating agencies against him, adding that the action made him feel like he was a "terrorist."

The chief minister was speaking a day after a Delhi court issued him summons on February 17, calling for his appearance while observing that the Aam Aadmi Party leader was legally bound to join an investigation being conducted by ED into alleged irregularities in the Delhi excise policy 2021-22.

The summons was issued after non-compliance with its summons in a money-laundering case linked to the Aam Admi Party (AAP) government's Delhi excise policy.

The complaint was filed after the Delhi CM skipped multiple summons issued by the ED in its money laundering investigation.

On February 2, Kejriwal skipped the Enforcement Directorate's summons for the fifth time in connection with the money laundering probe related to irregularities in the Delhi excise policy 2021-22 case.

The fresh summons to the Delhi Chief Minister followed the fourth summons, which he had skipped on January 18.

Kejriwal has so far skipped four previous summons issued by the ED on January 18, January 3, November 2, and December 22, calling them "illegal and politically motivated."

Meanwhile, AAP has scheduled to hold a meeting of its Political Affairs Committee (PAC) on February 13 to decide on the candidates for the Lok Sabha seats in Goa, Haryana, and Gujarat.

**BUSINESS**

# GAMING GIANT ACTIVISION WAS ALREADY PLANNING 'SIGNIFICANT' LAYOFFS: MICROSOFT




Microsoft has revealed that Activision Blizzard, which it acquired recently for $68.7 billion, was already planning to slash a significant number of jobs before the acquisition.

The tech giant is laying off at least 1,900 employees at gaming company Activision Blizzard as well as at Xbox.

In a response to the US Federal Trade Commission (FTC), the company said that consistent with broader trends in the gaming industry, "Activision was already planning on eliminating a significant number of jobs while still operating as an independent company."

"The recent announcement thus cannot be attributed fully to the merger," said Microsoft.

The FTC is still appealing a district court's decision not to block Microsoft's Activision Blizzard acquisition.

"In continuing its opposition to the deal, the FTC ignores the reality that the deal itself has substantially changed. Since the FTC lost in court last July, Microsoft was required by the UK competition authority to restructure the acquisition globally and therefore did not acquire the cloud streaming rights to Activision Blizzard games in the United States," a Microsoft spokesperson said on the FTC filing.

"Additionally, Sony and Microsoft signed a binding agreement to keep Call of Duty on PlayStation on even better terms than Sony had before," added the company spokesperson, reports The Verge.

The latest job cuts will affect around 8 per cent of the overall Microsoft gaming division that has some 22,000 employees.

Activision Blizzard President Mike Ybarra has also left the company.

"I want to thank everyone who is impacted today for their meaningful contributions to their teams, to Blizzard, and to players' lives. It's an incredibly hard day and my energy and support will be focused on all those amazing individuals impacted – this is in no way a reflection on your amazing work," Ybarra posted on X.

Microsoft completed its $68.7 billion acquisition of Activision Blizzard in October last year, after a long battle with regulators in the UK and the US.

# LONDON STOCKS SET FOR SECOND WEEK OF DECLINES; LEGAL & GENERAL WEIGHS




British equities were little changed on Friday as gains in pharma and biotech shares were offset by a drop in chemicals and life insurance shares, while higher yields weighed on market sentiment.

The blue-chip FTSE 100 was flat by 0922 GMT, while the midcap FTSE 250 slipped 0.1%. Both indexes are on track for second consecutive week of declines.

The yield on the British 10-year benchmark note climbed to its highest level in over two months tracking its European peers, putting further pressure on equities.

Shares of Legal & General dropped 2.8% to the bottom of the FTSE 100, following a cut in price target by Citigroup. The broader life insurance index shed 1.6%, leading sectoral declines.

"Legal & General solvency remains strong but with the new CEO fresh in the seat, we see the likelihood of upside surprises from additional capital return as low at this point," Citigroup note stated.

The chemicals index lost 1.4% after shares in Victrex dropped 1.9% following the specialty chemicals maker's fall in first-quarter revenue.

With a 0.9% rise, pharma and biotech shares were among top sectoral gainers, after dropping more than 4.4% in the previous session over weak earnings report from drugmaker AstraZeneca.

In corporate news, Tesco would sell most of its banking operations to lender Barclays for up to 700 million pounds ($883 million).

Shares in Britain's biggest retailer advanced 0.8%, while Barclays slipped 1.3%. Motor finance firm S&U was the top decliner on FTSE smallcap index, down 7.6%, after annual profit forecast came below market estimates.

Meanwhile, Bank of England policymaker Jonathan Haskel, who voted to raise interest rates last week, said he is encouraged by signs that Britain's inflation pressures might be on the wane but needs more evidence of a cool-down.

# GOOGLE BIDS GOODBYE TO BARD, KICK-STARTS NEXT GEMINI AI ERA: SUNDAR PICHAI



Google and Alphabet CEO Sundar Pichai on Thursday announced the next chapter in the company's AI journey, saying Bard will now simply be called Gemini.

It's available in 40 languages on the web, and is coming to a new Gemini app on Android and on the Google app on iOS.

"The version with Ultra will be called Gemini Advanced, a new experience far more capable at reasoning, following instructions, coding, and creative collaboration," Pichai said in a statement.

People can start using Gemini Advanced by subscribing to the new Google One AI Premium plan, he added.

The 'Gemini Ultra' AI model will be a paid experience, available through a new $20 Google One tier (with a two-month-long free trial) that also includes 2TB of storage and access to Gemini in Google Workspace apps like Docs, Slides, Sheets and Meet.

"AI is also now central to two businesses that have grown rapidly in recent years: our Cloud and Workspace services and our popular subscription service Google One, which is just about to cross 100 million subscribers," said Pichai.

Gemini is evolving to be more than just the models. The largest model Ultra 1.0 is the first to outperform human experts on MMLU (massive multitask language understanding), which uses a combination of 57 subjects — including math, physics, history, law, medicine and ethics — to test knowledge and problem-solving abilities.

Gemini models are also coming to products that people and businesses use every day, including Workspace and Google Cloud, Pichai informed.

The 'Duet AI' feature will become Gemini for Workspace, and soon consumers with the Google One AI Premium plan can use Gemini in Gmail, Docs, Sheets, Slides and Meet.

For Cloud customers, Duet AI will also become Gemini in the coming weeks, said the company.

TO WIN BIG YOU SOMETIMES HAVE TO TAKE BIG RISKS